# முத்தமிட்ட சொப்பனங்கள்

## அனுராதா ரமணன்



## அனுராதா ரமணனின் பிற நூல்கள்

| | |
|---|---|
| கற்பூரக்காற்று | 20 00 |
| எத்தனை காலம் உனக்காக | 16 00 |
| புவனா என்னும் புயல் | அச்சில் |
| யாருமிங்கே ராமனில்லே | 14 00 |
| மழைக்கால மல்லிகைகள் | அச்சில் |
| விளக்கில்லா சித்திரங்கள் | அச்சில் |
| ரகசியக் கனவுகள் | 23 00 |
| அந்தரத்தில் ஓர் ஊஞ்சல் | 32 00 |
| காதல் யாத்திரை | 20 00 |
| மேகம் தேடும் வானம் | 20 00 |
| வழிகாட்டி வழி தவறுகிறது | 20 00 |
| மாயமனம் | 20 00 |
| நிழலுக்கு ஏங்கும் மரங்கள் | 22 00 |
| தென்றலே ஆடிவா | 25 00 |
| சந்திப்பு தொடரும் | அச்சில் |
| வித்யாசமாய் வித்யா | அச்சில் |
| துணையாக ஒருபறவை | அச்சில் |
| காதலுக்கு ஒரு(க்) நீ | அச்சில் |
| மறந்து போ நெஞ்சமே | 25 00 |
| சொல்லாதே யாரும் கேட்டால் | 20 00 |
| நீ மட்டும் வரலாம் | 25 00 |
| இவர்தான் கொஞ்சம் கவனி | 21 00 |
| விலகவா பழகினோம் | 25 00 |
| என்றும் உன் ராணி | 32 00 |
| இரண்டாவது வாழ்க்கை | 50 00 |
| தொட்டில் சுகம் | 40 00 |
| முந்தானைத் தொட்டில் | 27 00 |

# முத்தமிட்ட சொப்பனங்கள்

## 1

அழகாய், சின்னதாய், சிவப்பு சாந்துத் திலகம் தேவியின் முகத்துக்கு மேலும் கம்பீரத்தைக் கூட்டுகிறது.

அவள், மீண்டும் ஒரு முறை கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள்.

அவளது கணவன் ஜெகன் சொல்வது போலச் சொல்ல வேண்டுமானால்—

''உன்னைக் கல்யாணம் செஞ்சிட்டப்ப நீ இருந்ததை விடவும் இப்ப ரொம்ப அழகா இருக்கே...''

அவன் இப்படிச் சொல்லும் போதெல்லாம் தேவியும் மறக்காமல் சொல்வாள் :

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. என்னைக் கல்யாணம் செஞ்சிட்டப்ப, நீங்க எற்கனவே ஒரு பெண்டாட்டிய இழந்த வருத்தத்துல இருந்தீங்க. மூணு வயசுப் பொண் குழந்தைய வச்சிட்டு அதை வளர்க்கத் தெரியாமப் படாத பாடு பட்டுட்டு இருந்தீங்க. அப்ப உங்க முன்னாலே ரதியையே கொண்டு வந்து நிறுத்தினாலும் ஏறெடுத்துப் பார்த்திருக்க மாட்டீங்க, என் அதிருஷ்டம்... அந்த நேரத்துல உங்க வீட்டு வாசப்படிய மிதிச்சேன்... இன்விக்கு உங்க கண்ணுக்கு என்னோட சாதாரண முகம்கூட அழகாத் தெரியுது...''

அவன் இப்படிச் சொல்லும்போதெல்லாம், ஜெகன் அவளது இதழ்களைத் தனது இரண்டுவிரல்களால்அப்படியே இறுக்கி முத்தமிடுவான்.

''கல்யாணமானப் புதுசுல இருந்ததை விட இப்ப நிறைய பேசக் கத்துட்டிருக்கே!''

அவளும் சளைக்காமல் சிரித்தபடி பதிலளிப்பாள்:

''என்ன செய்யறது... வாயுள்ள பிள்ளை பிழைக்கும்னு எங்கம்மா அடிக்கடி சொல்லுவாங்க அது இந்த வீட்டுக்கு வந்த பிறகுதான் தெரிஞ்சிட்டேன். இங்கே, எல்லாத்தையும் ஆரம்பத்துல கேட்டுத்தானே வாங்க வேண்டியிருந்தது ''

இதைச் சொல்லும்போது தேவியின் முகத்தைப் பார்க்க வேண்டும். அந்த செதுக்கிய நாசியிலும், அடர்ந்த கண் இமைகளிலும் மெலிதான கர்வம் தெரியும்.

அது... ஆணவத்தினால் உண்டான கர்வமில்லை. அன்பினால் அந்த வீட்டின் இரண்டு இதயங்களிலும் இடம் பிடித்துவிட்ட கர்வம்...

நிருபமா......

ஜெகனின் மனைவியாக தேவி, அந்த வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தபோது மூன்று வயசுக் குழந்தை.

''அம்மா பாரு—''

இப்படி ஜெகன், தேவியைச் சுட்டிக் காட்டிய போது, 'குபுக்'கென மெத்தையில் குப்புறப் படுத்து முகத்தை மூடிக் கொண்ட குழந்தை—

''ம்மா... நாநா ...''

''என்ன சொல்றா...''



ஜெகன், குழந்தையைத் தூக்கித் தோளில் சாய்த்துக் கொண்டு விரக்தியுடன் சிரிக்கிறான்—

''அவளுக்குள்ளே இன்னமும் அவ அம்மா முகம் அப்படியே இருக்குன்னு நினைக்கிறேன். குழந்தைதானே... கொஞ்ச நாளுல எல்லாத்தையும் மறந்துடுவான்னு தோணுது. பார்ப்போம். இப்ப எவ்வளவோ தேவலை. அவ அம்மா போன புதுசுல எல்லாம், என்கிட்டகூட வர மாட்டா... 'ஓ'ன்னு அழுவா— பாதி ராத்திரியில நினைச்சிட்டு அலற ஆரம்பிச்சா — பொழுது விடியற வரைக்கும் ஓய மாட்டா...''

நிஜம்தான்.

குழந்தை மனசு, கண்ணாடி போல இருந்தது— தேவியின் அன்பும், அரவணைப்பும் — குழந்தையை மெள்ள மெள்ள அவள்பால் ஈர்க்கச் செய்தது.

ஜெகன்தான் நிருபமாவை விடவும் பெரிய குழந்தையாக இருந்தான். அவன் மனசுக்குள் ஜானகி கோவில் கட்டி உட்கார்ந்திருந்தாள்.

தேவி எத்தனைதான் அவனைக் கலகலப்பாக்க முயன்றாலும்— அவனது பேச்சு சுற்றிச் சுற்றி முதல் மனைவியைப் பற்றித்தான் இருந்தது.

''உங்களை விட எனக்கு நிருவைத்தான் ரொம்பப் பிடிச்சிருக்கு ...''

''ஏன் தேவி ...''

''பின்னே என்ன— நிரு சமத்து... அம்மாவுக்கு ஒரு முத்தம் கொடும்மான்னு கேட்டா— 'பச்'சுனு கொடுத்துடுத்து.''

'' ...''

''இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படி கற்பகம் சினிமா ஜெமினிகணேசன் மாதிரி முகத்தை வச்சிட்டிருக்கீங்க—''

அவன், அவளைப் பார்த்துச் சிரிக்க முயற்சிப்பான். அவளோ, நிருபமாவை விட்டே அவனது கன்னத்தைப் பிடித்துத் திருகச் சொல்லுவாள்.

''திரு... அப்பா கன்னத்தைக் கிள்ளும்மா...''

''இன்னித்தேன்...''

''அம்மாவுக்கு உம்மா கொடு...''

''உம்மா...''

குழந்தையின் ரோஜா இதழ்கள் தேவியின் கன்னத்தில் பதிய— அவள் ஓரக்கண்ணால் கணவனைப் பார்த்துச் சிரிப்பாள்.

''சில சமயங்கள்லே பெரியவங்களை விட குழந்தைங்க புத்திசாலியா இருக்குங்க... பாருங்க... கிடைச்சதை எத்து கிட்டு சந்தோஷமா இருக்கு...''

''உன்னோட அன்புல குத்தம் சொல்லவே முடியாது தேவி. பார்க்கப் போனா— உன்னோட அந்த தாராள மனசு எனக்குக் கிடையாது... ஏற்கனவே பெண்டாட்டி போய், ஒரு பிள்ளையையும் வச்சிட்டிருக்கற என்னைப் போய் கல்யாணம் செஞ்சிட்டுருக்கியே... உன் முன்னாலே நான் குறுகிப்போறேன்...''

அவன் என்னென்னவோ பிதற்றியிருக்கிறான்.

இப்பொழுது கூட, நினைத்துக் கொண்டால் தேவி— பழசை எல்லாம் நினைவு படுத்திக் கேலி செய்வாள்.

''அய்யோ... வீர பாண்டிய கட்ட பொம்மனுக்கு ஒண்ணு விட்ட தம்பி பேரன்தான் நீங்க... தாலி கட்டினப் பெண்டாட்டியத் தொடறதுக்கு என்னமா பயந்தீங்க...''



அவனும் சிரிப்பான்.

''நீ ஆயிரம்தான் சொல்லு. என் மனசுல ஒரு பயம் எப்பவும் உண்டு. ஜானகி என் மேல உயிரையே வச்சிருந்தா. வீட்டுலேயே எங்க அம்மா கிட்ட கோவிச்சுப்பா கடைசி மட்டும் எனக்குத் தன் கையாலேதான் சாப்பாடு... நான் தான் வெத்தலை மடிச்சுத் தரணும்னு... இவ்வளவு ஏன்... எனக்கும் அவளுக்கும் நடுவுல நிருபமாவைப் படுக்கப் போட மாட்டா... எப்பவும் அவளோட ஒரு பக்கத்துல நான்... இன்னொரு பக்கம் திரு... நான் கூட கேலி செஞ்சிருக்கேன். ரெண்டாவது பொறக்கப் போறதே— அப்ப என் இடம் எதுன்னு கேட்டு...''

''அப்படி என் மேல உயிரையே வச்சிருந்த ஜானகி போய், ஒரே வருஷத்துல உன்னைக் கல்யாணம் செஞ்சுட்டேன். எல்லா ஆம்பிளையும் மாதிரி குழந்தைய வளர்க்க ஒருத்தி வேணும்னு...இப்ப அந்த ஒருத்தி கூட கொஞ்சிக் குலாவினா— அவளோட ஆன்மா என்னைச் சும்மா விடுமா? கடைசியில உங்க புத்தியக் காட்டிட்டீங்களேயின்னு சபிக்காதா...''

தேவி, நிருபமாவையும் அவனையும் சேர்த்து அணைத்துக் கொண்டு சொல்லுவாள்,

''இங்கே பாருங்க. அக்கா ரொம்பவும் நல்லவங்கன்னு சொல்லியிருக்கீங்க. உங்களை விடவும் அவங்க மனசு, தான் பெத்த குழந்தைய விட்டுட்டுப் போறதை நினைச்சு என்ன பாடு பட்டிருக்கும்? ஏதோ— என்னை நீங்க கல்யாணம் செஞ்சிட்டப்ப, 'ஏதுடா, நம்ம இடத்துக்கு வந்து நம்ம குழந்தைய இவ என்ன பாடு படுத்தப் போறாளோன்னு அவங்க ஆன்மா பதை பதைச்சிருக்கும் தான். ஆனா, நாளடைவுல திரு என்கிட்ட பிரியமா இருக்கிறதையும், நான் குழந்தை மேல வச்சிருக்கற அன்பையும் பார்த்து அக்கா ஆவி உருவுல இருந்தாலும் சந்தோஷப் பட்டிருப்பாங்க...''

''அப்படிங்கறே?''

''அப்படியேத்தான். நம்ம குழந்தைய இத்தனை நல்லா கவனிச்சுக்கறாளே— போனாப் போறது— சின்னப் பொண்ணு... அவளுக்குத்தான் நம்ம புருஷனை விட்டா வேற யார் இருக்காங்க... ஏதோ, நாமதான் அனுபவிக்க முடியலே. அவளாவது அனுபவிக்கட்டும்னுதான் அவங்க மனசார வாழ்த்துவாங்க—''

''சாதாரணமா சினிமாவுல எவளாவது அழகா இருக்கான்னு நான் சொல்லிட்டாக் கூட தாங்காது தேவி அவளுக்கு...''

''அதெல்லாம் உசிரோட இருக்கறப்பதான். உடம்பில்லாத ஜீவனுக்குக் கோபம் பொறாமை எதுவும் இருக்காது. அவங்க தெய்வம் மாதிரி. நாமதான் ஒவ்வொரு வருஷமும் அவங்க நினைவா படையல் போட்டு, சுமங்கலிக்கு புடவை, ரவிக்கை எடுத்துத் தர்றோமே— கோபமே வராது—''

''வராதுங்கறே—''

''ம்—''

சும்மா... பேசிப் பேசித்தான் அவனை அணுக முடிந்தது அவளால். ஒவ்வொரு முறையும் தயக்கம்... பயம்— 'அவ இருந்தா இப்படிச் செய்வா— எனக்காக் தயிர் சாதம் பிசைஞ்சு மாடிக்கு எடுத்துட்டு வந்து—'

'அவ வத்தல் குழம்பு வச்சா ஊரையே தூக்கும்—'

'அவ பாடிக் கேட்கணும்—'

'அவ ரொம்பவும் மென்மையானவ தேவி— ரோஜா இதழ் மாதிரி உடம்பு... அதுவும் கொஞ்சம் அழுத்திப் பிடிச்சிட்டாக் கூடத் துடிச்சுப் போயிடுவா... நான், இத்தனை மிருதுவாத் தொடறதே அவ ஏற்படுத்திக் கொடுத்தப் பழக்கம்தான்...'



தேவிக்கு இந்த வாழ்க்கை ஒரு சவாலாகவே இருந்தது.

சாதாரணமாய் கல்யாணம் செய்துக் கொண்டு ஒரு ஆண்பிள்ளையின் மனசில் இடம் பிடிப்பது ஒன்றும் அத்தனை கஷ்டமில்லை.

அப்படிப்பட்ட மனிதன் — பெண்டாட்டியின் உணர்வுகளுக்கு ஏற்ப வளையத் தயாராக இருப்பான்.

பச்சைக் களிமண் மாதிரி... எப்படி வேண்டுமானாலும் ஒரு பெண் நினைத்தால் — உருவாக்கலாம்...

''ஐயோ... அப்படி அழுத்தாதீங்க— வலிக்காதா?''

''ஸாரிடா—''

''என்ன நீங்க... இந்தக் கலர்லே சட்டை எடுத்துட்டு... ஒயிட் அண்ட் ஒயிட் போட்டாத்தான் டீசன்ட்டா இருக்கும்...''

''எனக்கு என்ன தெரியும்... இனிமே நீ என்ன சொல்றியோ அப்படித்தான்....''

''எப்படித்தான் இப்படி அஞ்சாறு தடவை அலுக்காம காபி குடிக்கிறீங்களோ.... அதுக்குப் பேசாம ஹார்லிக்ஸ், போர்ன்விடா ஏதாவது சாப்பிட்டாலும் உண்டு...''

''கண்ணம்மா... ஆபீஸ்லே காபிதான் கிடைக்கும். நீ போர்ன்விடாவை ஃப்ளாஸ்க்குல போட்டுக் கொடு...அய்யா அப்புறம் காபி பக்கம் தலை வச்சுப் படுக்கறேனா பாரு...''

''ஏங்க... இன்னிக்கு வெள்ளிக்கிழமை... எங்க வீட்டுல வெள்ளிக்கிழமையில அசைவம் சேர்க்க மாட்டோம்... உங்களுக்கு...''

''அடடா... இது என்ன கேள்விம்மா...உனக்கு எதுவோ அதுவேதான் எனக்கும். அசைவம்தான் வேணும்கற ஆசாமி இல்லே நான்....''

பெண் — அதுவும் தனக்காக, தன் வீட்டில், தன்னுடைய ஆளுகைக்குள் அகப்பட வந்திருப்பவள் — என்கிற நினைப்பே ஒரு மனிதனை எத்தனைச் சுலபமாய் அவளுக்கு அடிமை சாஸனம் எழுத வைத்து விடுகிறது...

அப்படி சாஸனம் எழுதித் தந்து — அவளது கைக் குழந்தை போல வாழ்ந்து — அந்த வாழ்க்கையையே வழக்கமாக்கிக் கொண்டவனை, இரண்டாவதாக வந்தவள் தன் வசம் திருப்ப வேண்டும் என்றால்......

அது சவால்தானே...

முதல் மனைவி சொன்னதை எல்லாம் வேதவாக்காக எடுத்துக் கொண்டவனை — இவள், தனக்குத் தகுந்தாற் போல மாற்றும் பொழுது எத்தனைச் சிக்கல்கள்.... பிடிவாதங்கள்....

''என்ன நீங்க... நுனி விரலாலே தொடறீங்க?''

''பின்னே ... அழுத்தித் தொட்டா வலிக்காதா —ஜானகி வெள்ளை உடம்பு... செண்பகப் பூ மாதிரி... ஒரு தடவை அழுத்திப் பிடிச்சிட்டேன். தோள்பட்டை அப்படியே கன்றிப் போச்சு.''

''அது ஜானகி... இது தேவி. எனக்கு வலிக்காது.''

''ஏன் அப்படி!''

''என்னா— அது அப்படித்தான். அவங்க வெள்ளை கலந்த மஞ்சள்ங்கறீங்க... நான் மாநிறம். இவங்க சின்னதா செதுக்கினாப்பல இருப்பாங்கன்னு சொல்றீங்க... நான் வளர்த்தி. அவங்க கண்ணு நீள வாட்டத்துல—என் கண்ணு பெரிசு பெரிசா .. உங்களையே முழுங்கிடற மாதிரி...''

படித்துப் படித்துச் சொல்லி... இன்றைக்கு ஜெகனின் மனசுக்குள் நீறு பூத்த நெருப்பு போலத்தான் ஜானகி.



எப்பொழுதாவது பத்திரிக்கைகளில், அல்லது டெலிவிஷனில்— ரயில் விபத்து என்றெ செய்தி வந்தால்... அவன் தனக்குள் சொல்லிக் கொள்வது போலச் சொல்லுவான்:

''பாவம் ஜானகி— பேசாம அவளை ரெண்டாவது பிரசவத்துக்கு நான் இங்கேயே வச்சிட்டிருக்கலாம். அவங்க அம்மா வந்து கூப்பிட்டாங்களேயின்னு அனுப்பி வச்சேன் கண்டிப்பா உங்களுக்கு ஒரு பிள்ளையப் பெத்து எடுத்துட்டு வருவேன்னு போனா... இப்படித்தான் பாலம் உடைஞ்சு, பயங்கரமான விபத்து ...''

''நிருபமாவும் அம்மா கூடத்தானே போச்சு அதுக்கு கடவுள் ஆயுசை எழுதியிருக்கார். அவளும் இல்லாமப் போயிருந்தா— என் நிலைமைய நினைச்சுப் பார்க்கவே முடியாது தேவி... பைத்தியம் பிடிச்சிருக்கும் தெரியுமா...''

''ரொம்பவும் பெரிய அதிசயம் தேவி... ரயில் பொட்டிக்குள்ள இருந்து அவங்களை எடுக்கவே முடியலே... எல்லாம் எரிஞ்சு கருகிருச்சு... அதுவும் ஜானகியோட அம்மா தலை— வெளிய கிடந்தது... உடம்பைக் காணவே காணும்— நிருபமாவுக்கு மட்டும் லேசா நெருப்புகாயம் நான் போனப்ப ஆஸ்பத்திரியில இருந்தா குழந்தையப் பார்த்ததும் கதறிட்டேன்... ஜானகி முழுக்க எரிஞ்சிட்டா— அவளுக்கு தனிப்பட்ட முறையில என் கையாலே கொள்ளி கூட இல்லே... ஒட்டு மொத்தமாச் சேர்த்து...''

தொண்டையடைக்கக் கூறுவான். தேவி, தன் கையிலுள்ள வேலையை அப்படியே போட்டு விட்டு, கணவனின் அருகில் வந்து, அவனை நெஞ்சோடு சாய்த்துக் கொள்வாள்...

''அடடா... என்னது இது குழந்தை மாதிரி... இருங்க நிருபமாவைக் கூப்பிட்டு முகம் பார்க்கற கண்ணாடிய எடுத்துட்டு வரச் சொல்றேன்...''

''எதுக்கு?''

''நேத்து நிரு அழுதப்ப நீங்க சொல்லலையா...முகம் பார்க்கற கண்ணாடியைக் கொண்டு வர்றேன்... அழறப்ப நிரு முகம் எப்படியிருக்குன்னு பார்க்கட்டும்னு கேலி செய்யலே... இருங்க... நிரு... நிரு...''

''ஏய் ஏய்...''

அவன் முரண்டு பிடிப்பான். நிருபமா, எங்கிருந்தோ ஓடி வந்து தேவியின் கழுத்தைக் கட்டிக்கொள்வாள்.

''கூப்பிட்டியா அம்மா...''

''ம்...''

''என்ன வேணும்...''

''எனக்கு ஒன்னும் வேணாம்... உங்க அப்பாவுக்குதான் ஒரு அம்மா வேணுமாம்... நிரு எங்கே... கூப்பிடுன்னாரு... அதான் கூப்பிட்டேன்—''

குழந்தை பென்சிலைக் கன்னத்தில் வைத்தபடி, ஜெகனை— தலைசாய்த்துப் பார்க்கும்.

''ரொம்ப அவசரமா வேணுமாப்பா...''

''ஏன்...''

''இல்லே... எனக்கு ஹோம் ஓர்க் இருக்கு முடிச்சிட்டு வந்துடறேனே... அதுக்குள்ளே வேணும்னா அம்மா... ப்ளீஸ்... எனக்காக நீயே கொடுத்திடேன்—''

''இதப் பாருடா... இதுஎத்தனை பிகு செஞ்சுக்கறது...''

ஜெகன் மனைவியிடம் சொல்லி சொல்லி மாய்ந்து போவான்.



எப்பொழுது நிருபமா, தேவியைத் தன் தாயாகவே ஏற்றுக் கொண்டு விட்டாளோ — அப்பொழுதே ஜெகன், ஜானகியின் புகைப் படத்தையும், கல்யாண ஆல்பத்தையும் எடுத்து கண்காணாமல் வைத்து விட்டான்.

''அவளைப் பொறுத்த வரைக்கும் நீயே அவளோட அம்மாவா இரு தேவி... பின்னாலே விவரம் தெரிஞ்சா— உன் மேல அவளுக்கு இப்ப இருக்கற பிரியம் விட்டுப் போயிடுமோ என்னமோ... நம்ம வாயாலே சொல்ல வேண்டாம்...''

தேவியுமே இதைத்தான் விரும்பினாள்.

திருமணத்தின் போதே — அவள் மனசுக்குள் நிருபமா தான் அழுத்தமாய் பதிந்திருந்தாள்.

இப்பொழுதோ பிரிக்க முடியாத பந்தமாகி விட்டது. அதற்கேற்றாற் போல — தேவியின் வயிற்றில் ஒரு கரு கூட உற்பத்தி ஆகவே இல்லை.

ஜெகனும் அவளைப் பல டாக்டர்களிடம் அழைத்துப் போனான்...

''பிரச்சனை எதுவுமில்லே... சில பேருக்கு லேட்டா பொறக்கும்... ஷீ இஸ் நார்மல்...''

ஜெகனுக்காவது அந்தக் குறை இருக்குமோ என்னவோ... தேவிக்குக் கொஞ்சம்கூட இல்லை...

''எனக்கென்ன குறைச்சல் இப்ப? நான் கிழிச்ச கோட்டைத் தாண்டாத புருஷன்... பத்து மாசம் சுமக்காம— தங்க விக்ரகம் மாதிரி ஒரு குழந்தை... நானும் நிருவுமா வெளிலப் போனா — பார்க்கறவங்க கண்ணெல்லாம் எங்க மேலத்தான். இது போதாதா.... வேறென்ன வேணும்?''

''அக்காவுக்காவது பொறந்த வீடுன்னு ஒன்னு டில்லியில இருந்தது... எனக்கு அதுவுமில்லை. இத்தனை

வயசுக்கு அப்புறம் மசக்கை, ஆஸ்பத்திரி, குழந்தையின்னா நம்ம ரொமன் லைஃபே மாறிடும். நம்ம நிருவுக்கே பத்து வயசாயிடுச்சு. இத்தனை நாள் கழிச்சு, நான் சினை மாடு மாதிரி 'புசுபுசு'ன்னு உடம்பைத் தூக்க மாட்டாமத் தூக்கிட்டு நடக்க மாட்டேம்பா.... அசிங்கம்...''

தேவி தனக்கு வயசாகி விட்டதாக அடிக்கடி சொல்லுவளே தவிர — அவளுக்கு வயசென்னவோ இருபத்தியெட்டு தான்.

யாராவது உனக்கு இவ்வளவு பெரிய பெண்ணா என்று கேட்டுவிடப் போகிறார்களே என்பதற்காக முன்கூட்டியே இப்படிச் சொல்லிக் கொள்வாள்...

நிருபமா இல்லாது — அல்லது — அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் போது — ஜெகனை இவள் வம்புக்கு இழுக்கும்போது பார்க்க வேண்டும். பதினெட்டு வயசு சின்னப் பெண் போல இருப்பாள்...

நாலு நாட்களாக ஜெகன் ஊரில் இல்லை. நிருபமாவுக்குப் பரிட்சை நடந்து கொண்டிருந்தது.

அவளுக்குப் பரிட்சை என்றால் இவள் தலை சீவக்கூட மறந்து விடுவாள். புத்தகமும் கையுமாய் அவளுடனேயே ஒன்றி விடுவாள். என்னவோ அவளே பரிட்சை எழுதுகிற மாதிரி டென்ஷனாகி விடுவாள்.

பல சமயங்களில் நிருபமாவே, இவளை செல்லமாய் கடிந்து கொள்வாள்.

''எம்மா இப்படி பயந்து நடுங்கறே... பரிட்சை எனக்குத் தான்.... உனக்கில்லே....''

இன்றோடு பரிட்சை ஜுரம் முடிந்துவிட்டது... இரவு ஒன்பது மணிக்குள் ஜெகன் வந்து விடுவதாகச் சொல்லிப் போயிருக்கிறான்....



''நிரு குட்டீ... இன்னிக்கு ராத்திரி வெங்காய சாம்பார் உருளைக் கிழங்கு பொடிமாஸ்...''

''ஊம்ஹூம்... சில்லி சிக்கன்மா... ப்ளீஸ்...''

''சரிடா...''

சமையலறை வேலையை முடித்து, முகம் கழுவி —மெலிதாய் பவுடர் ஒற்றி - திலகம் இட்டு முடிவதற்குள்.... வாசல் 'காலிங் பெல்' ஒலிக்கிறது...

''அதுக்குள்ள வந்துட்டாரா என்ன...''

ஓடிப்போய் கதவைத் திறந்தவள் — திகைத்து நிற்கிறாள்....

சுமார் முப்பது வயசு மதிக்கத்தக்க பெண்மணி... கையில் எட்டு வயசுச் சிறுவனுடன்....

''என் பேரு ஜானகி... இங்கே ஜெகந்நாதன்னு''

வந்தவள் கேட்க — தேவிக்குக் காலடியில் பூமியே நழுவுகிறது.

# 2

ஜானகிக்கு இன்னமும் நம்ப முடியவில்லை. எட்டு வருடங்களுக்குப் பிறகு அவள் மறுபடியும் சென்னை திரும்புகிறாள்.

எட்டு வருடம்...

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மகத்தான காலம்....

நினைக்க நினைக்க கண்ணீர் பெருகுகிறது அவளுக்கு... புடைவைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டே, அவள் பாபுவைப் பார்த்துச் சிரிக்கிறாள்.

ரயிலில் ஏறி உட்கார்ந்ததிலிருந்தே— அவன் அவளை, தன் கேள்விகளால் துளைத்தெடுத்து விட்டான்.

''அம்மா, நாம இனிமே பம்பாய்க்கு வர மாட்டோமா''

'மாட்டோம் கண்ணு ..''

''அப்ப சோனா பெரிம்மா, யுவராஜ்மாமா இவங்களை எல்லாம் திரும்பப் பார்க்கவே முடியாதா...''

''உம்...ஹூம்—''

குழந்தைக்குக் கவலை பிடித்துக் கொண்டது. தன் தாயையே கண் கொட்டாமல் பார்க்கிறான்.

''அப்படியானா நமக்கு இனிமே யார் சாப்பாடு போடுவாங்க . பசிக்குமே!''

ஜானகி, சிறுவனை இழுத்துத் தன்னோடு அணைத்துக் கொள்கிறாள்...

இது நேரம் வரையில் தாய்க்கும் மகனுக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளை உன்னிப்பாய் கேட்டுக் கொண்டிருந்த பரசுராம், ஜானகிக்கு மட்டும் கேட்கும் தொனியில் சொலகிறார்.

''இங்கே பாரு ஜானகி... இப்பவே பிடிச்ச பையன் கிட்ட அப்பாவைப் பார்க்கப் போறோம்கற மாதிரி சொல்லாதே... எட்டு வருஷம் கழிச்சு... அங்கே என்ன நிலைமையோ— யார் எங்கே இருக்காங்களோ... எப்படி இருப்பாங்களோ...''

ஜானகி அவசரமாய் இடைமறிக்கிறாள்.



''என் கணவர் என்னையும், குழந்தைங்களையும் நினைச்சு துரும்பாய் போயிருப்பார்... வீடுதான் வேற மாறியிருப்பாரோன்னு சந்தேகமா இருக்கு. முன்னே நாங்க மாம்பலத்துல ஜி. என். செட்டி ரோடுல இருந்தோம்... வாசல்லே நித்திய மல்லிச் செடி இருக்கும். வீட்டு முகப்புல ஒரு கிருஷ்ணன் பொம்மை இருக்கும்...

பரசுராம் முகவாயைத் தடவியபடி யோசனையில் ஆழ்ந்தார்.

கணவனைப் பார்க்கப் போகும் ஆனந்தத்தில் ஜானகி, ஒரு குழந்தை போல ஒவ்வொரு ஸ்டேஷனையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு வந்தாலும் அவளுக்குள் ஒரு உறுத்தல் இல்லாமல் இல்லை...

அதை ஜானகியிடமே அவர் வாய் திறந்து கேட்கிறார்.

''ஜானகி, கேட்கறேனேயின்னு தப்பா நினைச்சுக் காதே.. இத்தனை வருஷம் எங்கே இருந்தே.. எனக்கு ஏன் தகவலே கொடுக்கலேயின்னு உன் புருஷன் கேட்க மாட்டாரா... நீ என்ன சொல்லப் போறே .. பொய் சொல்லி சமாளிக்கக் கூடிய விஷயமில்லே இது. நிஜத்தைச் சொன்னா... அவர் உன்னை மறுபடி ஏத்துப் பாரா...''

ஜானகி இதற்குப் பதில் எதும் சொல்லவில்லை. சற்று நேரம் தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள்.

'நியாயமான கேள்விதானே...'

'எட்டு வருஷமா எங்கே இருந்தேயின்னு கேட்டா என்ன சொல்லப் போறேன்?'

'இத்தனை நாளும் எங்கேயோ இருந்துட்டு இப்ப ஏன் வந்தேயின்னு கேட்டாத்தான் என்ன சொல்லப் போறேன்...

'நிஜத்தைச் சொன்னா நம்புவாரா?'

'சாதாரணமா பேச்சு வாக்குல அவர் எந்தப் பொண்ணையாவது பாராட்டினாலே எனக்குக் கோபம் பொங்கிட்டு வருமே... ராத்திரி முழுக்க அவர் கூட முகம் கொடுத்துப் பேசாம அலைக்கழிச்சிருக்கேனே...'

'இப்ப நான் மட்டும், 'பம்பாய்லே ஒரு சிவப்பு விளக்குப் பகுதியில் இருந்தேன்; ஆனா இந்த நிமிஷம் வரைக்கும் பரிசுத்தமாத்தான் இருக்கேன்னு சொன்னா அவர் நம்புவாரா? அப்படி நம்பித்தான் ஆகணும்னு நான் வற்புறுத்தத்தான் முடியுமா?'

ஜானகி கண்களை மூடி, விபத்து நடந்த பின்பு தன்னுடைய வாழ்க்கையையே திசை திருப்பிய சம்பவங்களை வரிசையாய் நினைத்துப் பார்க்கிறாள்.

ரயிலேறுவதற்கு முதல் நாள் வரையில் ஜெகன் அவள் முந்தானையைப் பிடித்துக் கொண்டேதானே அலைந்தான்.

"ஷ்...அம்மா பார்த்துட்டே இருக்கா... ஏன் இப்படி மானத்தை வாங்கறீங்க?"

"இதுல மானம் போக என்ன இருக்கு ஜானு? நான் உன் தலைப்பைப் பிடிச்சிட்டுத்தானே திரியறேன். ஜானு... கையில இருக்கற பணம் போதுமா – என்னா, அம்மாவை சிரமப் படுத்தக் கூடாது நீ— பேசாம இங்கேயே டெலிவரிய வச்சுக்கலாம். டில்லியில யார் இருக்காங்க... உங்க அம்மாவைத் தவிர..."

ஜெகனுக்கு அவளை வழியனுப்புகிற வரையில் மனசே இல்லை. சென்னையிலாவது அவனுக்கென்று அம்மா



இருக்கிறாள். ஒன்றுவிட்ட அக்கா, தங்கைகள் இருக்கிறார்கள். ஏதோ ஒரு நர்சிங்ஹோமில் — வலியெடுத்து கொண்டு போய் சேர்த்தால் கூடப் போதும். சாதாரணப் பிரசவம் என்றால் மூன்றே நாளில் வீடு திரும்பி விடலாம். அவன் நிருபமாவுக்கு குளிப்பாட்டி, சாப்பாடு போட்டுப் பார்த்துக் கொண்டால், அவளைப் பெற்றவள் சமையலைக் கவனித்துக் கொள்ளப் போகிறாள். ஜானகியின் தாய், பிள்ளை பெற்ற மகளையும், பேரக் குழந்தையையும் பொன் போல கவனித்துக் கொண்டால் — பிரசவம் ஒரு பிரச்சனைக்குரிய சமாச்சாரமா என்ன?

மேலும் ஜானகியின் தாய், தன் மகளை டில்லிக்கு அழைத்துப் போவதற்கு ஒரே காரணம் — அங்கே அந்த அம்மாள் ஒரு பெரிய அரசாங்க ஆஸ்பத்திரியில் சீஃப் நர்சாக இருந்ததுதான்...

"அம்மாவுக்கு அங்கேயின்னா எல்லா டாக்டர்களையும் தெரியும். அம்மாவுக்காக எல்லாரும் ஓடிவந்து செய்வாங்க... நிருபமா பொறக்கறப்பலே கடைசி நிமிஷத்துல ஆயுதம் போடும்படியா ஆயிடுச்சி... என் பிளட் குரூப் வேற அதிகம் கிடைக்காததாம். அம்மாவுக்கு அங்கே வாய்ஸ் உண்டு..."

ஒரு பெண்ணுக்கு புகுந்த வீட்டில் எத்தனைதான் வசதிகள் இருந்தாலும், பிரசவ சமயத்தில் பிறந்த வீட்டுக்குப் போவதில்தான் எத்தனை உற்சாகம்?

அவளை ரயிலேற்றி விட்டு, ஜன்னலைப் பிடித்தபடி ரயில் வேகமெடுக்கும் வரையில் கூடவே ஓடி வந்தானே ஜெகன்...

"ஜானு... குழந்தை பத்திரம்..."

"சரிங்க.. நீங்க கண்டபடி வெளியில சாப்பிடாதீங்க.."

"சேச்சே... மாட்டேன். டாக்டர் டெலிவரி எப்ப

ஆகும்னு சொல்றாரோ எனக்கு எழுது.. நான் லீவு போட்டுட்டு வர்றேன்..''

''உம்...''

''உங்க அம்மா வீட்டு பாத்ரூம்லே கொஞ்சம் வழுக்கும். வயிறும் பிள்ளையா எங்கேயாவது விழுந்து வைக்காதே..''

''அய்யோ... அம்மா பார்க்கறா...இரையாதீங்க...''

''நிருபமாவுக்கு டாக்டர் கொடுத்த இருமல் மருந்து இன்னொரு புது பாட்டில் உன் பெட்டியில வச்சிருக்கேன்...''

''சரி... இன்னிக்கே காஸ் சிலிண்டருக்குப் போன் செஞ்சிடுங்க. அனேகமா இன்னும் ரெண்டு நாள்தான் வரும் அப்புறம் உங்கம்மாவுக்குக் கோபம் வரும்...''

எத்தனையெத்தனை பரிமாறல்கள்.

வண்டி வேகமெடுத்த பிறகு கூட — அம்மாவிடம் சொல்லிக்கொண்டே இருந்தானே...

''அவருக்கு எல்லாம் சூடா இருக்கணும். எங்க மாமியாராலே முடியாது. ராத்திரிக்கும் சோத்து காலையிலேயே சமைச்சு வச்சிடுவா... அவருக்குக் கோபமா வரும்..''

''அவர் இல்லாம நிருபமாவை எப்படித்தான் சமாளிக்கப் போறேனோ... தெரியலே..''

முதல்நாள் வரையில் எந்த பிரச்சனையும் இல்லை... மறுநாள் இரவு எட்டு மணி சுமாருக்கு நிருபமா பசியினால் சிணுங்கத் தொடங்கினாள்.

ஹார்லிக்ஸ் கரைக்க பிளாஸ்க்கை எடுத்தவள், அது காலியாக இருப்பதைக் கண்டதும், அம்மா பக்கம் திரும்பினாள்.

அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். தட்டி எழுப்பவே பாவமாக இருந்தது ஜானகிக்கு.



வயசாகவில்லையா... புருஷத் துணையில்லாமல் ஒரே பெண்ணை வளர்த்து ஆளாக்கி, கண் நிறைந்த கணவனைத் தேடி ஒப்படைத்து, இப்பொழுது இரண்டாவது பிரசவத்துக்கும் ஆசை ஆசையாய் கூட்டிப் போகிறாளே—

அம்மா மட்டும் விழித்திருந்தால் — அவளை ஓடுகிற ரயிலில் நடக்கவே விட மாட்டாள். தானே பேத்தியையும் சுமந்து கொண்டு, ரயிலின் குலுக்கலுக்கு எற்ப, ஆடி ஆடி— ரயிலுக்குள்ளேயே இணைந்திருக்கும் சமையல் - சாப்பாட்டு கேபினுக்குப் போய் விட்டு வருவாள்.

''நீ ஏம்மா நடக்கறே. அதான் அஞ்சு நிமிஷத்துக்கு ஒரு தடவை ரயில்வே கேன்டீன் ஆளுங்களே சமோசாவும், சாண்ட்விச்சும் கொண்டு வந்துட்டேதானே இருக்காங்க..''

''இல்லேடி.. அங்கே போனா சுடச்சுட எடுத்துட்டு வரலாம். இவங்க ஒவ்வொரு கம்பார்ட்மெண்ட்டா வித்துட்டு வர்றதுக்குள்ளே ஆறி அவலாப் போயிடறது..''

இந்த முறை அவள் அம்மாவை எழுப்பவில்லை. அழும் குழந்தையையும், பிளாஸ்கையும் எடுத்துக்கொண்டு, அவளே கிச்சன் கேபினுக்குச் சென்றாள்.

''வெந்நீரே இல்லீங்க..''

''கொஞ்சம் சுட வச்சுத் தாங்களேன்.. குழந்தை அழறது..''

நிறை மாசம் பிள்ளைத்தாய்ச்சியின் மீது இரக்கம் கொண்ட ரயில்வே சமையற்காரர் — வெந்நீர் வைத்து தர.. ஹார்லிக்ஸை அங்கேயே கரைத்து, ஃபீடிங் பாட்டிலில் போட்டு எடுத்துக் கொண்டு வெளியே வர., குழந்தை ஆவல் மிகுதியில் பாட்டிலைப் பிடுங்கி வாயில் வைத்துக் கொண்டே, இவளுக்கு முன்னால் ஓட—

அப்பொழுது கூட ஜெகன் சொன்ன வார்த்தைகள்தான் அவள் காதில் ஒலித்தது.

''ரெண்டாவது பொறந்ததுக்கு அப்புறமும் இது பாட்டிலை விடாம இருக்கப் போறது ஜானு... மெதுவா இந்தப் பழக்கத்தை மாத்திடு...''

'மாத்தனும்...'

இதுதான் அவள் மூளையில் பதிந்த கடைசி நினைவு... அடுத்த நிமிடமே தான் நடந்து கொண்டிருந்த பெட்டி— ஏதோ காலி டப்பாவை உருட்டி விட்டாற்போல தடதட வென உருள்வதைத்தான் உணர்ந்தாள்...

தரையில் நின்றவள்— ஒரே கணத்தில்— மேல் கூரைக் கும், மறுபடியும் தரைக்குமாய் பந்தாடப் பட்டாள்.

''என்ன ஆச்சு... ஐயோ... அம்மா... திரு...''

மொத்தமான அலறல்கள் காதைத் துளைத்தெடுப்பது போன்ற அழுகுரல்கள்.

கும்மிருட்டு... அடுத்தாற்போல கண்ணைப் பறிக்கும் வெளிச்சம்... வலி.. வலி...

இதுதான் தெரியும்.. இதற்கு மேல் என்ன நடந்தது என்பதே அவளுக்குத் தெரியாது.

கண்ணைத் திறந்து பார்த்த போது— அவளது நாசிக்கு டெட்டால் நெடிதான் முதலில்... அப்புறம்தான் சுற்றியிருந்த படுக்கைகள் தென்பட்டன... உப்பிய வயிறு வடிந்திருப்பது மூளைக்குள் உரைத்தது...

'எப்ப பிரசவம் ஆச்சு...'

'நான் எங்கே இருக்கேன்...'

'என் குழந்தைகள் எங்கே...'



'அம்மா...'

ஆயிரம் கேள்விகள் எழுந்தாலும் உடனே மயக்கம் வந்து, எண்ணங்களை இருட்டாக்க...

அடுத்த முறை அவள் கண் விழித்த போது ஒரு பெரிய வீட்டின் பின்புறத் தாழ்வாரத்தில் கிடந்தாள். இங்கே மருந்து வாசனை இல்லை... பான்பராக்கும், மல்லிகையும் கலந்த வாசனை...

''அம்மாடி... முழிச்சுட்டியா இந்தா உன் பிள்ளையப் பிடி...''

இருபத்தியைந்து வயசு மதிக்கத்தக்க இளைஞன் ஒருவன் கையிலிருந்த துணிச்சுருளை நீட்டினான்..

''பையன்.. எங்களுக்குத் தேவையில்லே. நீயே வச்சுக்க..''

அவன் இந்தியில் பேசினான். டில்லியில் படித்ததினால் ஜானகிக்கு மொழி பிரச்சனை இல்லை..

'ஆனால் நான் எங்கிருக்கிறேன்.. திரு... அம்மா..' ஐயோ, ரயில் தலை குப்புற கவுந்ததே...'

அவள் 'ஓ'வென அழுதாள்.

''இதப் பாரு... குழந்தைக்குக் கால் ஒண்ணுதான் டாமேஜ். மத்தபடி லட்டு மாதிரிதானே இருக்கு? அப்புறம் எதுக்கு அழறே... இந்த மட்டும் பொழச்சியேன்னு சந்தோஷப் படு... நீ இங்கே வந்து மூணு மாசமாறது தெரியுமா... நான்தான் உன்னையும் குழந்தையையும் ஜாக்கிரதையா இது நாள் வரைக்கும் கவனிச்சிட்டிருந்தேன்.. ஒரு தாங்க்ஸ் கூடச் சொல்லாம அழறியே.. ''

ஜானகி முதன் முதலாய் அழுதபடியே பேசினாள்.

''என் அம்மா.. என்னோடப் பொண்ணு...''

4508 F1
762

''பொண்ணா?''

இளைஞனின் கண்களில் வெளிச்சம் போட்டாற்போல ஒரு பிரகாசம்..

''என்ன வயசு?''

''ரெண்டு வயசு ... ரொம்ப சின்னது .. செலுலாய்ட் பொம்மை மாதிரி இருப்பா...''

''த்ச்...''

அவன் அலுத்துக் கொண்டான்.

''அன்னிக்கு நடந்த விபத்துல — என்னோட வந்தவங்கள்லேயே நாலு பொண்ணுங்க அவுட். நாம அத்தனை பேருமே போயிருக்க வேண்டியது. டில்லி ஆஸ்பத்திரிக்கு நாம போயிருந்தோம்னா நேரே மார்ச்சுவரிக்குத்தான் போயிருப்போம்— நிறைய பேரை - டில்லிக்குத்தான் தூக்கிட்டுப் போனாங்க... நம்மளை போபாலுக்கு அருகிலேயே ஒரு கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியில சேர்த்துட்டாங்க. அங்கேயே உனக்குப் பிரசவமும் ஆயிடுச்சு. நான் என் கூட வந்த பொண்ணுங்கள்லே உருப்படியா இருந்ததுங்களை மட்டும் தேடி எடுத்து, ஒரு வேன் வச்சு எத்திட்டுருந்தப்ப தான் - டாக்டருங்க, உன்னையும், குழந்தையையும் என் கூட வந்தவங்கன்னு நினைச்சு ஒப்படைச்சாங்க..''

இளைஞன் அது நேரம் வரையில் கடைவாயில் அடக்கி வைத்திருந்த பான்பராக்கைத் துப்பிவிட்டு, காவிப் பற்கள் தெரிய சிரித்தான்.

''சரிதான் எத்தனையோ நஷ்டப்பட்டாச்சு. கடவுளாப் பார்த்து ஒரு தேவதையக் கொடுக்கறப்ப ஏன் வேண்டாம்னு சொல்லணும்னு தோணிச்சு. அப்படியே உன்னை



யும் தூக்கி வண்டியிலப் போட்டுட்டேன். அங்கேயிருந்து அப்படியே ரயிலேறி பம்பாய் வந்தாச்சு!''

''பம்பாயா?''

ஜானகி அலறினாள்...

''நான் மெட்ராஸ்லை சேர்ந்தவ. டில்லிக்கு அம்மாவோட.... அம்— அம்மா—''

அவன் புன்னகைத்தபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அழுது ஓயும் வரையில் மிகப் பொறுமையாக.

''இப்ப உன்னை என்ன பண்ணிட்டோம்? உன் மேல எங்க ஆசாமிங்க விரல்கூடப் படல்லே— எனக்கு அந்த மாதிரி அல்பத்தனமான ஆசையெல்லாம் கிடையாது. நீ மகாராணி மாதிரி இருக்கே... பார்த்தாலே 'ஏ' கிளாஸ்னு முகத்துல தெரியுது. நான் மெட்ராஸ்லேயிருந்து வர்றப்ப அழைச்சிட்டு வந்ததுல நாலு 'சி' கிளாஸ் செத்துப்போச்சு— தலைக்கு ஆயிரம் ரூபா கொடுத்து வாங்கிட்டு வந்தேன். என் எஜமானி சோனாவுக்கு நாலாயிரம் ரூபா நஷ்டமாயிடுச்சேன்னு வருத்தப்பட்டுட்டேயிருந்தேன். சோனா கூட சொல்லிச்சு. பரவாயில்லே யுவராஜ்.. கடவுள் நாம உழைச்சு சம்பாதிச்ச பணத்தை எப்பவும் எடுத்துக்க மாட்டார். ரெண்டு மடங்கா கொடுத்திடுவார்னு..அவ கொடுத்த தைரியத்துலதான் நான் போபால் ஆஸ்பத்திரியில இருந்து கிளம்பினேன். சோனா தெய்வம் மாதிரி. அவ சொன்னா பலிக்கும்— என்ன பார்க்கறே.. துர்கா தேவியோட அருள் கிடைச்ச பொம்பிளை. ரெண்டு தடவை அவ வந்து உன்னைப் பார்த்துட்டுப் போனா....''

'' அவதான் சொல்லியிருக்கா. யுவராஜ், இந்தப் பொண்ணு நமக்குப் பெரிய பொக்கிஷம்— நல்லா கவனி. குழந்தைய டாக்டர் கிட்ட காட்டு... எந்தக் காரணத்தைக்

கொண்டும் குழந்தைய அம்மா கிட்டயிருந்து பிரிக்காதே யின்னு— அவ சொல்லிட்டா. அப்புறம் அதுக்கு அப்பீலே கிடையாது..''

அவன் — யுவராஜ் — ஒரு விசித்திரமானக் கலவையாக இருந்தான். நடுப்பகலில் ஆரம்பித்து விடியும் வரையில் — வாடிக்கைகளைப் பிடிப்பதிலேயே குறியாக இருப்பான். நடுவில் ஒரு முறை வீட்டுக்குள் வந்து அங்கிருக்கும் பெண் களிடம் சிரித்துப் பேசிவிட்டுப் போவான். 'சோப்பு வேணு மாக்கா— வெளில போறேன்.. யாருக்கு என்ன வேணும்' என்று குரல் கொடுப்பான். அதே சமயம், சமையல் வேலையைக் கவனிக்கும் ஆயாவிடம் ராத்திரி சமையலுக்கு என்ன பதார்த்தம் செய்யவேண்டும் என்பதையும் சொல்லு வான்.

''மாஜீ... இன்னிக்கு நம்ம கவிதாவுக்குப் பொறந்த நாளாம்... சேட்டு கிட்ட சொல்லி ஸ்வீட் வாங்கி எல்லா ருக்கும் கொடுக்கச் சொல்லுச்சி'' — என்பான்.

அதே சமயம், தங்கள் பேச்சைக் கேட்காமலோ,அல்லது வேறு ஒரு குழுவில் சேர்வதற்கு ரகசியமாய் ஒரு பெண் முயற்சி செய்கிறாள் என்பது தெரிய வந்தாலோ —அவளை துணி துவைப்பது போலத் துவைத்து எடுத்துவிடுவான்.

''சோனாவுக்குத் துரோகம் செய்யறே நீ— செய்யற தொழில்லே நேர்மை வேணும். இங்கே என்ன இல்லை யின்னு நீ — அந்த ஆளை அழைச்சு பேரம் பேசிலே—''

ஒவ்வொரு கேள்விக்கும் ஒவ்வொரு அடி... வெள்ளிக் கிழமைகளிலும், பௌர்ணமி தினத்திலும் சுத்த விரதம். பச்சைத் தண்ணீர் பல்லில் படாமல் நெற்றியில் நீளமாய் செந்தூரமும், துளசி மணி மாலையுமாய் அலைவான். கேட் டால், 'எல்லாமே கடவுளின் விளையாட்டு... நாமெல்லா



ருமே துர்கையின் விளையாட்டு பொம்மைகள்' என்று தத் துவம் பேசுவான்.

ஜானகியை அவன் கண்ணியமாகவே நடத்தினான். குழந்தையை அந்த வீட்டிலுள்ள பெண்கள் 'பாபு பாபு' என்று அழைத்து, பின் அதுவே நிலைத்து விட்டது.

ஜானகிக்குத் தலையில் அடி பட்டிருந்ததால் மிகவும் பலஹீனமாக இருந்தாள். தவிர இவளது ரத்தப் பிரிவு மிகவும் அபூர்வமானது... பிரசவ நேரத்தில் அதிக ரத்தப் விரயமானால்— உடனே ரத்தம் செலுத்த வேண்டும் என்கிற விஷய ஞானமே தெரியாமலோ— இல்லை— தெரிந்தும் அந்த விபத்து சமயத்தில் அவளை அவ்வளவு தான் கவனிக்க முடிந்ததோ... தெரியவில்லை—

அவள் எழுந்து நடக்கக் கூட திராணியற்றவளாக இருந்தாள்.

குழந்தைக்குக் கிடைத்த மருத்துவ வசதி— அவளுக்குக் கிடைக்கவில்லை... ஏதோ ஒரு டாக்டர்— இவர்களுக்காக வழக்கமாக வருபவர் வந்து பார்த்து விட்டு— ஏதோ சில மருந்துகளை எழுதித் தருவார்கள்... யுவராஜ் மிகத் தெளி வாக பெரிய சங்கீத வித்வான் போல — 'இந்துஸ்தானி பெஹாக்'கை முனகிக் கொண்டே கடைக்குப் போய் மருந்துகளையும் டானிக் வகையறாக்களையும் வாங்கி வருவான்.

சோனா...

ஒரு முறை அவள், ஜானகியைப் பார்க்க வந்தபோது— ஜானகி சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள்.

''எப்படி இருக்கா என் சந்தனத் தேவதை?''

யுவராஜ் கையிலிருந்த குழந்தையைத் தான் வாங்கிக் கொண்டு அவளருகில் வந்தமர்ந்தாள்.

ஜானகி, அவனையே இமைக்காமல் பார்த்தாள்.

அப்பொழுது சோனாவுக்கு நாற்பது வயசிருக்கும். ஆனால், முப்பத்தியைந்தே சொல்லும்படியாக தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

சிவப்பு புடைவை... சிவப்பு ரவிக்கை— கைகளில் தங்க வளையல்கள், நடுநடுவே சிவப்பு கண்ணாடி வளையல்கள்— நெற்றி வகிட்டில் சிந்தூரம்...

"அம்மா—"

ஜானகி, அவளது பாதங்களைக் கெட்டியாகப் பிடித்தாள்.

# 3

திடுமாறி விழாமலிருப்பதற்காக, தேவி வாசற்கதவை கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறாள்.

"என்ன...பேரு சொன்னீங்க?"

"ஜானகி— அவர் இருந்தா, போய் சொல்லுங்க— தெரியும்..."

ஜானகி புன்சிரிப்புடன் சொல்கிறாள். பரசுராம், தன் காரில் அமர்ந்தபடியே அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

இறங்கிப் போய் ஜானகியின் அருகில் நிற்க வேண்டும் போலிருக்கிறது. ஆனாலும், ஜானகி அழைக்கும் வரையில்



அவர்களது குடும்ப விவகாரத்தில் தலையிடுவதில்லை என்கிற தீர்மானத்துடன் அமர்ந்திருக்கிறார்—

ஜானகியை 'வா'வென அழைக்கக் கூடத் தோன்றாதவளாய் தேவி நின்றிருக்கையில்தான் அந்தச் சம்பவம் நடக்கிறது...

"அம்மா... பசிக்கிறது... சாதம் போடறியா..."

நிருபமா... எங்கிருந்தோ ஓடி வந்து தேவியின் கால்களைக் கட்டிக் கொள்ள— ஜானகி ஒரு கணம் அதிர்ந்தே போகிறாள்.

தேவியைத் தன் கணவனுக்கு இரண்டாவது மனைவியாக இருக்கக் கூடுமோ என்று கொஞ்சம் கூட சிந்தனையை ஓடவிடத் தெரியாமல் நின்றிருந்தவளுக்கு... அந்தச் சிறுமி... அவளது முகம்...

எத்தனை வருஷங்களானால்தான் என்ன... தன் குழந்தையை அவளுக்கு அடையாளம் தெரியாதா என்ன?

அந்த உருண்டை முகம். சின்னதாய் மேல் தூக்கிய மூக்கு... முகவாயில் ஆள்காட்டி விரலினால் அழுத்தினாற் போல இருக்கிற அழகுக்குழி...

இதோ அப்படியே அவளின் மறு பதிப்பாய் பாபு அவளருகிலேயே நிற்கிறானே...

அப்படியானால் என் குழந்தை... என் நிரு... உயிரோடு இருக்கிறாளா... அவளை நான் எமனுக்கு தாரை வார்க்கவில்லையா... கடவுளே... கடவுளே... உன் கருணைக்கு நான் எப்படி நன்றி சொல்லப் போகிறேன்?

இத்தனையையும் மீறி— நெஞ்சின் ஒரு மூலையில் நம்பிக்கையில்லாத சந்தேகம்.

'ஒரு வேளை இது நிரு இல்லையோ...'

'முதலாவது இது அவள் வீடுதானா என்பதே தெரிய வில்லை...'

தேவி, இதற்குள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு ஜானகியைப் பார்த்து தலையசைக்கிறாள்.

''வாங்க... திடீர்னு ஏற்பட்ட ஷாக்குல அப்படியே பிரமிச்சு நின்னுட்டேன்... நிரு... அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணும்மா. இதோ வந்துடறேன்... அதுக்குள்ள — அம்மாவுக்கு உதவியா தட்டு, தண்ணி எல்லாம் டைனிங் டேபிள்லே கொண்டு வை... ஓடு...''

''ஓ...கே...''

சிறுமி குதித்துக் கொண்டு ஓடுகிறாள்.

''இது ஜெகன்னாதன் வீடுதான். நீங்க இப்பப் பார்த்தது... அவரோட முதல் பொண்ணு...''

மேற்கொண்டு ஏதோ சொல்ல வந்தவள் சிறுவன் பாபு வைப் பார்க்கிறாள்.

அவனோ, தாயின் மீது பட்டும்படாமலும் சாய்ந்த வாறு, தேவியையே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறான்.

''கண்ணா... உன் பேரென்ன...''

''பாபு...''

''நான் உங்க அம்மா கூடக் கொஞ்சம் பேசணுமே... நீ என்ன செய்யறே... எங்க நிருபமாவோட சாப்பிடறே... என்ன... உள்ளே வா...''

''இருக்கட்டும் ஆன்ட்டி. நீங்க பேசுங்க. நான் வாசல்லே எங்க அங்கிள் இருக்கார். அவர் கூட காருல உட்கார்ந்திருக்கேன். பேசி முடிச்சதும் கூப்பிடுங்க...''

அந்தச் சிறுவன் நடக்கும் போது இலேசாக விந்தி நடப்பதைக் கவனித்த தேவியின் நெஞ்சம் கனக்கிறது.



அவன் தலை மறைந்ததும் பாய்ந்து வந்து, ஜானகி யின் அருகில் உட்காருகிறாள் தேவி.

''அக்கா... இப்ப சொல்லுங்க. நீங்க உயிரோட இருக்கீங்களா... இந்த விஷயத்தை ஏன், உங்க கணவருக்கு நீங்க தெரிவிக்கவே இல்லே?''

இப்பொழுதுதான் ஜானகி, அவளை தீர்க்கமாய் பார்த் தாள்.

''நீ யாருன்னு சொல்லவே இல்லையேம்மா...''

தேவிக்கு துக்கத்தில் நெஞ்சே வெடித்துவிடும் போல இருக்கிறது.

இந்த வீட்டுக்கும், இதில் உள்ள அவளுடைய உயிருக்கு உயிரானவர்களுக்கும் உடைமைக்காரி வந்து விட்டாள்.

'நீ யார்' — என்று கேட்கிறாள்.

யாரென்று சொல்வாள்...

உன் கணவனின் மனைவி என்றா... அல்லது உன் மக ளுக்கு நான்தான் அம்மா என்றா... திருமணமாகி மூன்று வருஷத்திலேயே நீ போய் விட்டாய்... நீ விட்டுச் சென்ற மாணிக்கங்களை எட்டு வருஷங்களாய் நெஞ்சில் வைத்து சுமக்கிறவள் என்றா...

எப்படி தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வாள்!

ஆனாலும் தயங்கி பிரயோசனமேயில்லை. இன்னும் சற்று நேரத்தில் — சாப்பாட்டு மேஜையில் சகலத்தையும் எடுத்து வைத்துவிட்டு நிருபமா குரல் கொடுப்பாள்.

பாபுவைக் கேட்டுக் கொண்டாற் போல — அவளிடம் கேட்க முடியாது.

ஏன்... எதற்கு... இவள் யார்... என்றெல்லாம் ஆயிரம் கேள்விகள் கேட்பாள்.

தேவி, ஜானகியின் கரங்களை எடுத்து, கண்களில் ஒத்திக் கொள்கிறாள்.

"அக்கா... நீங்க விபத்துல இறந்துட்டதா செய்தி வந்து இவர் டில்லிக்குப் பறந்தார்.. அங்கே உங்கம்மாவோட சடலத்தையும், அறுந்து தொங்கின தலையையும்தான் பார்க்க முடிஞ்சது... சடலம் கூட முழுக்க எரிஞ்சிடுத்து. உங்க உடம்பு எதுன்னு கண்டே பிடிக்க முடியாத நிலை... எதுக்கும் டில்லி ஆஸ்பத்திரியில உயிரோட இருப்பீங்களோங்கற நப்பாசையில போனவருக்கு — நிருபமா கிடைச்சா... மொத்தமா உயிர் இழந்தவங்க பட்டியல்லே உங்க பேர் இருந்தது... தன் பெண்டாட்டி உடம்பு எதுன்னே தெரியாம பொதுவான ஒரு சடங்கை செஞ்சிட்டு குழந்தையோட மெட்ராஸ் வந்தார். அதுக்கு அப்புறம் சுமார் ஒரு வருஷம் போல... சின்னக் குழந்தைய வச்சிட்டு படாதபாடு பட்டார்... அப்புறம் தான்... அப்புறம்தான்... அவர் என்னை...அதுவும் அவரோட அம்மா வற்புறுத்தலுக்காக.."

ஜானகிக்குப் புரிகிறது.

சொத்து கை மாறிப் போய்விட்டது.

தன்னை விடவும் தன் புருஷனுடனும், தான் பெற்ற குழந்தையுடனும் அதிக வருஷம் வாழ்ந்தவள் — வாழ்ந்து கொண்டிருப்பவள் இதோ எதிரில் அமர்ந்திருக்கிறாள்.

பரசுராம் சொன்னது போலவே – ஆகிவிட்டதே...

ஜானகி, கன்னத்தில் வழியும் கண்ணீரைக்கூட துடைக்க மறந்தவளாய் உட்கார்ந்து விட்டாள்.

தேவிதான் படபடவெனச் சொல்கிறாள்.



"அக்கா— அக்கா— நீங்க என்னை அன்னியமா நினைக்க வேண்டாம். உங்களைப் பத்தி நினைக்கறப்ப எல்லாம் இவர் இன்னிக்கும் எத்தனை வேதனை படுவார்ங்கறது எனக்குத்தான் தெரியும். தயவு செஞ்சு— இன்னிக்கு ஒரு ராத்திரி நீங்க வெளியில தங்கும்படியா இருக்கும். இன்னிக்கு ராத்திரி என் கணவர் — ஸாரி — உங்க ஹஸ்பெண்ட் ஊருல இருந்து வந்துடுவார். நீங்க இருக்கறதைச் சொல்லிட்டாப் போதும். உங்களைப் பார்க்க பறந்து வந்துடுவாரு—"

ஜானகி இன்னமும் அழுது கொண்டிருந்தாள்.

"நான்— நிருபமா கிட்டயாவது பேசலாமா?"

"ஓ— தாராளமா—. ஆனா ஒரு வேண்டுகோள்—"

ஜானகி, இப்பொழுது தேவியை நிமிர்ந்து பார்க்கிறாள். மழைக்காலச் சூரியன்போல — அவளது முகத்தில் மெல்லிய புன்னகை.

"நீ என்ன கேட்கப் போறேங்கறது எனக்குத் தெரியும்., மிஸஸ் ஜெகன்—"

"என் பேரு தேவி. தேவியின்னே நீங்க என்னை கூப்பிடலாம்—"

'தேவி, நிருபமாவுக்கு நான்தான் அவளோட அம்மாங்கறது தெரியக்கூடாது. அதானே நீ சொல்ல வந்தது—"

தேவி தலை குனிகிறாள். இனம் புரியாத வேதனை—

ஜானகி, அவள் தோளில் தட்டுகிறாள்.

கவலைப்படாதே. என்னோட நிலை என்னன்னு எனக்கே தெரியாத சூழ்நிலையில இருக்கேன்... ஒரு சமயம் யோசிச்சுப் பார்த்தா — இத்தனை வருஷம் கழிச்சு என் மறுபடி இங்கே வந்தேன்னு தோணுது. நானும், பாபுவுக்கு

இது யார் வீடு... என்னன்னு ஒண்ணும் சொல்லலே— நல்ல வேளை... நான் என் குழந்தை கிட்ட சந்தோஷ மிருதியில சொன்னாலும் சொல்லியிருப்பேன். என் கூட வந்திருக்கற மிஸ்டர் பரசுராம்தான் எனக்கு அட்வைஸ் பண்ணிட்டே வந்தார்..."

தேவி இப்பொழுது தான் வாசற்பக்கம் பார்க்கிறாள்.

"மிஸ்டர் பரசுராம்...... யார்?"

ஜானகி சிரிக்கிறாள்.

"ஒரு ஆம்பிளைக்கு — ஒரு வருஷம் பெண்டாட்டி இல்லாம குழந்தைய வளர்க்கறதே பெரிய பாடாயிருக்கு... ஆனா மிஸ்டர் பரசுராம் குடும்பமே இல்லாம, பல குழந்தைகளை வளர்க்கறாரு... அவரும் இதே ரயில் விபத்துல தன் காலை மட்டுமில்லாம, பெண்டாட்டி, மூணு குழந்தைங்க எல்லாத்தையும் இழந்தவர்தான்... அதைப் பத்தி எல்லாம் நான் நாளைக்கு விவரமா சொல்றேன். மொத்தத்துல அவர் ஒரு நல்ல நண்பர்... நீ நிருபமாவைக் கூப்பிடறியா..."

"இதோ..."

தேவி, உட்பக்கம் திரும்பி குரல் கொடுக்கிறாள்.

திரு..."

"என்னம்மா?"

சிறுமி ஓடி வந்து, தேவியை உரசிக்கொண்டு நிற்கிறாள்.

"கண்ணம்மா...இவங்க என் ஃபிரண்டு. பேரு ஜானகி.."

"ஓ..."

ஜானகி, அவளை நோக்கி இரு கைகளையும் விரிக்கிறாள்.



"இங்கே வாடா..."

குழந்தை தயங்கியபடி தாயைப் பார்க்கிறாள்.

"கூப்பிடறாங்க இல்லே... போ..."

தயங்கியபடி அருகில் வந்து நின்ற குழந்தையை வாரியணைத்து உச்சி முகர்ந்தாள் ஜானகி... தன்னை மீறி கண்கள் ஆறாய் பெருக...

"என் கண்ணு... என் செல்லம்..."

"விடுங்க... விடுங்க என்னை... அம்மாவ்..."

நிருபமா அவளது கரங்களிலிருந்து திமிறிக்கொண்டு தேவியிடம் ஓடி வந்து, அவளது புடைவைத் தலைப்பினால் முகத்தை மூடிக் கொள்கிறாள்...

"என்ன திரு இது... ஆசையாத்தானே கூப்பிடறாங்க..."

"ஊஹூம்..."

தேவி, சங்கோஜத்துடன் ஜானகியைப் பார்த்துச் சிரிக்கிறாள்.

"புதுசு இல்லையா? பழகிட்டா சரியாயிடும்... நீங்க இப்ப எங்கே தங்கி இருக்கீங்க?"

"அடையாறுல... இரு... நான் பரசுராம்மை கேட்கறேன்..."

ஜானகி வாசற்பக்கம் நோக்கி, கையசைக்க — பரசுராம் பாபுவைத் தூக்கிக் கொண்டு இறங்கி வருகிறார்...

"பரசுராம்... இவங்க பேரு தேவி..."

"ஓ... நமஸ்காரம்..."

"இவங்கதான் ஜெகன்னாதனோட மனைவி..."

இதைச் சொல்லும்போதே ஜானகியின் குரல் உடைகிறது. சிரமப்பட்டு தன்னை அடக்கிக் கொள்கிறாள்.

பரசுராம் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டிக் கொள்ளாமல் புன்னகைக்கிறார்...

"அது வந்து... வந்து... நிரு... நிருபமா "

"யாரு?"

"நிருபமா... நான் சொல்லியிருக்கேனே..."

"அப்படியா..."

இப்பொழுது பரசுராமின் கண்களிலும் வியப்பு... 'உன் மகளா' — என்கிற ஆச்சர்யம் கடைசியில கடவுள் உனக்கு இப்படியொரு அற்புதப் பரிசைக் கொடுத்திருக்கிறாரா என்கிற சந்தோஷம்...

இதற்குமேல் ஜானகியைப் பேச விடாமல், தேவி முந்திக் கொள்கிறாள்.

"ஆமாங்க என் குழந்தை நிருபமாவை ரெண்டு வயசு வரைக்கும் வளர்த்தது இவங்கதான். அந்த ஆசையிலத் தான் அவங்க கூப்பிட்டு கொஞ்சறாங்க. இவ போக மாட்டேங்கறா... ரொம்பவும் அம்மா பைத்தியம்...எல்லாத் துக்கும் நான் வேணும் அவளுக்கு "

பரசுராம் புன்னகையுடன் தேவியையே பார்க்கிறார்.

புத்திசாலிப் பெண்... தனக்கு அந்த வீட்டில் எப்படிப் பட்டதொரு மதிப்பு இருக்கிறது என்பதைச் சொல்லாமல் சொல்லி விட்டாளே...

தேவி, அவரை அதிகம் யோசிக்க விடவில்லை



"நீங்க அடையாறுல இருக்கறதா அக்கா சொன்னாங்க...அவர் இன்னிக்கு ராத்திரி வந்துடுவார். நாளைக்கு நானும் அவருமா அக்காவைப் பார்க்க உங்க வீட்டுக்கே வரோம்... விலாசம்..."

"இதோ..."

பரசுராம் தனது விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டுகிறார்.

"அம்மா போகலாமா?"

பாபு குரல் கொடுக்கிறான்—

"வர்றேண்டா கண்ணா—"

ஜானகி புடவைத் தலைப்பால் முதுகை இழுத்துப் போர்த்திக் கொண்டு நகர— தேவி, அவளையே பார்த்தபடி நிற்கிறாள்.

"அம்மா..."

"உம்?"

"பசிக்குது. இப்ப நீ வரப் போறியா இல்லையா?"

"இதோ வர்றேண்டா..."

தேவி, ஒரு யந்திரம் மாதிரி நிருபமாவின் பின்னால் போகிறாள்—

"அது உன் ஃபிரண்டா!"

"ஆமாம்மா..."

"என்னை அவங்கதான் ரெண்டு வயசு வரைக்கும் வளர்த்தாங்களா?"

"ஆமா... அப்போ நாம, அவங்க கூடச் சேர்ந்து ஒரு வீட்டுலக் குடியிருந்தோம். அந்த சமயத்துல அவங்களுக்கு

குழந்தையே இல்லை. உன்னைக் கண்டா ரொம்பப் பிடிக்கும். உனக்கும் இவங்கன்னா ரொம்ப இஷ்டம்—"

தேவி, தன் மனசிலுள்ள பயம் தெரியாமல் இருப்பதற்காக, நிருபமாவிடம் என்னென்னவோ பேசிக்கொண்டே இருக்கிறாள்.

ஆனாலும்—உள்ளூர வெப்பமாய் ஒருவித லிலி படர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

'இதோ... இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர் வந்து விடுவார்...'

இந்த நினைப்பே அச்சத்தைக் கொடுப்பதாய்...

ஜெகன் எப்பொழுது ஊருக்குப் போய்விட்டு வந்தாலும் — வந்தவுடன் கேட்கும் முதல் கேள்வி இதுதான்.

"அப்புறம்... நான் இல்லாதப்ப என்னென்ன சமாச்சாரம்? யாராவது வந்தாங்களா? லெட்டர் ஏதாவது வந்ததா?"

அவளும் அவனுக்காகவே காத்திருந்தாற் போல எதையாவது சொல்லுவாள்.

"உங்க ஒன்னுவிட்ட அக்கா வந்திருந்தாங்க...லீவுக்கு அவங்க குழந்தைங்களையும் இங்கே அனுப்பச் சொல்லியிருக்கேன். நிருவோட சேர்ந்து விளையாடட்டுமே!"

"போச்சுடா... அப்ப இன்னும் பதினைஞ்சு நாளைக்கு தேவியோட தரிசனமே கிடைக்காதுன்னு சொல்லு... எங்கே பொழுது விடிஞ்சா அத்தனை வால்களுக்கும் எண்ணெய் தேய்ச்சு குளிப்பாட்டல்... காபி டிபன்... மதியானம் விருந்து... நடுவுல கொறிக்க தேன்குழல்... அதிரசம்... ராத்திரி பட்டர் நான், ஃபிஷ் ஃபிரை... அதுக்கும் அப்புறமா அத்தனையையும் தூக்கிக் காருல போட்டுட்டு பீச் வரைக்கும் ஒரு சின்ன ரவுண்ட்... போற வழியில ஐஸ்



கிரீம்... திரும்பி வந்து ஒவ்வொன்னுக்கும் கதை சொல்லி, பாத்ரூம் அழைச்சிட்டுப் போய், கொண்டு வந்து விட்டு... இதுவேதான் சரியா இருக்கப் போறது உனக்கு... என்னை கவனிக்க ஏது நேரம்!"

"என் பொருமறீங்க... ஒரே மாதிரி லைஃப் போயிட்டிருந்தா போரடிக்கும். நடுவுல இது மாதிரி ஒரு இடைவேளை தேவைதான்..."

தேவி நொடிப்பாள், ஆனாலும் உள்ளூர ஒரு வித கர்வம் தெறிக்கும்...

அன்பால் அவனை ஜெயித்துவிட்ட கர்வம்...

ஒரு முறை அவன் ஊர் போய்விட்டு வந்த போது — நிருபமா காலில் அடிபட்டு படுக்கையில் கிடந்தாள்.

பள்ளிக்கூடத்தில் காம்பவுண்டுச் சுவரில் ஆண்பிள்ளைத் தனமாக ஏறி, கீழே விழுந்து, காலில் மாவு கட்டுப்போட்டு அவளை நாலு ஆசிரியைகள் வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டபோது பதறிப்போய் விட்டாள் அவள்.

இரவு பகல் தூக்கமில்லை. குழந்தையுடன் சேர்ந்து அவளும் அழுது. அவள் சிரிக்கும் போதெல்லாம் தானும் சிரித்து...

வீடு வந்த ஜெகன் அன்று திகைத்துப் போய்விட்டான்.

ஒரு அறை முழுக்க பொம்மைகள்... டெலிவிஷனை 'தரதர'வென இழுத்துப் போய் நிருபமாவின் அறையில் வைத்திருந்தாள் தேவி.

கணவனைக் கண்டதும் 'ஓ'வென அழுதாள்.

"என்னங்க... குழந்தை காலை ஒடிச்சிட்டு வந்திட்டா.. நாம என்ன பண்ணப் போறோம்... என் குழந்தை நொண்டி நடந்தா — நான் பார்க்கவே மாட்டேன்... அய்யோ...

உங்களை எங்கேயெல்லாம் போன் போட்டுத் தேடறது... சமயத்துல கிடைக்காம... நான் என்ன செய்யறதுன்னேத் தெரியாம... வாங்க... டாக்டர்கிட்ட நீங்க தெளிவாக் கேளுங்க... என்கிட்ட சரியா சொல்லவே மாட்டேங்கறார்..."

ஜெகன், டாக்டரிடம் ஓடி, அவர் கடகடவெனச் சிரித்தபடி அவன் தோளில் தட்டியபடிச் சொன்ன வார்த்தைகள்...

"யப்பா... குழந்தையின்னா இப்படித்தான்... ஒரு இடத்துல நிற்காம துருதுருன்னு சுத்திட்டே இருக்கும். விழுந்து அடிபட்டுக்கும். ஆனா உன் பெண்டாட்டி இருக்கா பாரு... உலகத்துலயே தன் பொண்ணுக்குத்தான் இப்படியொரு கஷ்டம் நேர்ந்துட்ட மாதிரி அமர்க்களப் படுத்திட்டா. பார்க்கப் போனா இது ஒண்ணும் பெரிய ஃப்ராக்சரே இல்லே... இதை நாங்க — 'ஹேர் லைன் ஃப்ராக்சர்'னு சொல்லுவோம். மயிரிழைக்கு மெல்லிசா ஒரு கீறல் இருக்கும் எலும்புல. தானா சரியாப் போயிடும். இனிமே குழந்தைய உன் பெண்டாட்டிக்கிட்ட கொடுத்தனுப்பாதே நீயே எடுத்திட்டு வா..."

இதை அவன் தேவியிடம் சொன்னபோது தேவி அவன் நொடித்தாள்.

"அந்த டாக்டருக்கு குறையா இருக்கும். பெரிய்ய எலும்பு முறிவா இருந்தா, இன்னும் பத்து நாள் இழுக் கடிச்சு பணத்தை நிறைய கறக்கலாம்னு... அதுக்கு என் குழந்தைதான் கிடைச்சுதா?"

இந்தத் தடவை ஜெகன் எதிர்பாராத ஒன்றை அவள் சொல்லப் போகிறாள்.



இது அவனுக்கு இனிப்பான செய்தியா... இல்லை கெட்ட செய்தியா...

தேவியின் மனசுக்குள் சிறுவன் பாபுவும், அவன் காலும் வந்து நிற்க...

அவள் கண்களை மூடி தலையைக் குலுக்கிக் கொள்கிறாள்...

"அம்மா... அப்பா வந்தாச்சு!"

நிரு ஓடி வந்து சொல்ல — திடுக்கிட்டு எழுந்து நிற்கிறாள் தேவி.

"என்ன மகாராணி, உட்கார்ந்தே தூங்கறீங்க?"

நிருபமா, அப்பாவின் கன்னத்தில் செல்லமாகத் தட்டியபடியே சிரிக்கிறாள்.

"அதெல்லாம் இல்லேப்பா... இன்னிக்கு சாயந்திரம் அம்மாவோட சிநேகிதியாம்... என்னை ரெண்டு வயசு வரைக்கும் அவங்கதான் வளர்த்தாங்களாமே... அவங்க வந்திருந்தாங்க..."

ஜெகன் ஒன்றும் புரியாமல் மனைவியைப் பார்க்கிறான்...

நிருபமாவின் இரண்டு வயசு வரையில் தேவியே அவனது வாழ்க்கையில் இல்லையே... யாரது... புதுசாய்...

"யார் வந்தது தேவி...?"

"யாரோ ஜானகின்னு... கூட ஒரு பையன்... அப்பா அவனுக்கு ஒரு கால் இல்லே — ஷூ போட்டிருக்கான்..."

நிருபமா சர்வ சாதாரணமாய் சொல்ல — ஜெகன் 'விருட்'டெனத் திரும்புகிறான்.

# 4

பரசுராம் அதிகம் பேசவில்லை. ஜானகி அழுது முடியட்டும் என்று காத்திருக்கிறார்.

''பரசுராம்... அங்கே எற்கனவே ஒருத்தி இருக்கா... இனிமே என் நிலை என்ன...''

''யோசிக்கலாம் ஜானகி. எந்தவொரு பிரச்சனைக்கும் ஒரு முடிவு கிடைக்காமப் போயிடாது...''

''அந்த முடிவு நல்ல முடிவா இருக்கணுமே பரசுராம்.''

அவர், ஜானகியைப் பார்த்துச் சிரிக்கிறார்.

''ஜானகி... ராமாயணத்துல அந்த ஜானகி லவகுசர்களோடு அஞ்ஞாத வாசம் போன மாதிரி— நீயும் எட்டு வருஷம் உன் புருஷனைப் பிரிஞ்சு இருந்திருக்கே... இத்தனை நாள் உனக்குக் கிடைச்ச அனுபவத்துல இருந்து— நீ உன்னை— மலையே புரண்டு வந்தாலும் அசைக்க முடியாதவளா ஆக்கிட்டிருக்கணும். முடிவு எப்படிப்பட்டதா இருந்தாலும் அதைச் சந்தோஷமா ஏத்துக்கக் கூடிய மனப் பக்குவம் உனக்கு வேணும்...''

ஜானகி, பரசுராமையே வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டிருக்கிறாள். உதடு மட்டும், தன் வசமின்றி வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டிருக்கிறது.

''சோனா, யுவராஜ் எல்லோருமே சுயநலக்காரங்க... அவங்களோட திருப்தி, அவங்களோட சந்தோஷம்தான்



அவங்களுக்கு முக்கியமாப் போயிடுத்து. நீங்களும் அவங்க கூட சேர்ந்து நாடகமாடிட்டீங்க. கடைசியில என் வாழ்க்கை குட்டிச் சுவராப் போயிடுச்சு...''

ஜானகி தலையில் அடித்துக் கொண்டு அழுகிறாள். பரசுராம், ஜன்னல் வழியே தோட்டத்தைப் பார்க்கிறார்.

பாபு உற்சாகமாய் ஏதோ ஒரு இந்திப் பாட்டை முனகிக் கொண்டே, அவரதுக் காரைப் பளபளவெனத் துணியால் துடைத்து சுத்தமாக்கிக் கொண்டிருக்கிறான்.

''டேய்... டேய்... என்ன இவன்... எத்தனை சொன்னாலும் கேட்க மாட்டேங்கறான்... ஒரு இங்கிலீஷ் புக்கைக் கொடுத்து படிக்கச் சொல்லியிருந்தேன்... அதை விட்டுட்டு...''

ஜானகி, கண்களைத் துடைத்துக் கொண்டே சொல்கிறாள்:

''என்ன செய்யறது... அவன் வளர்ந்த சூழ்நிலை அப்படி...''

''இத்தனை நாளும் எப்படியோ... இனிமே, இவனை படிக்க வைக்கணும் ஜானகி...''

ஜானகி, நீண்ட பெருமூச்சு விடுகிறாள்...

சாதாரணமாய் சிவப்பு விளக்குப் பகுதியில் சிக்கிச் சீரழிந்த பெண்களைப் பற்றித்தான் அவள் கேள்விப் பட்டிருக்கிறாள். இப்பொழுது அவள்— அதேபகுதியில்— உடம்பை விற்கும் சந்தையில் யார் கையும் படாத காட்டு ரோஜாவாக வாழ்ந்து விட்டு வந்திருக்கிறாள். சொன்னால் யாராவது நம்புவார்களோ...

சோனா அன்பை மழையாய் பொழிந்தாள். அந்தப் பாசமும், பிரியமும் சேர்ந்து ஜானகியின் எதிர்காலத்தையே

நாசப்படுத்தப் போவதை கொஞ்சம் கூட யோசித்துப் பார்க்கவே இல்லையே அவன்?

தன் காலைப் பிடித்துக் கொண்டு கதறிய ஜானகியைத் தூக்கி நிறுத்தி, அணைத்து முத்தமிட்டாள் சோனா...

''சகோதரி... உன் பெயர் என்ன?''

''ஜானகி.''

''என் பேர் சோனா... நான், உன்னை ஜானுன்னு— அழைக்கப் போறேன்...''

''அம்மா, நான் உடனே இங்கேயிருந்து கிளம்பி போகணும். என் புருஷன் என்னைப் பறி கொடுத்துட்டதா நினைச்சு கதறிட்டிருப்பார். என்னையும், குழந்தையையும் எப்படியாவது அவர் கிட்ட சேர்த்துடுங்க...''

சோனா, ஜானகியின் கன்னத்தை வழித்து நெட்டி முறித்தாள்.

''உன் விலாசத்தைக் கொடு... நான் யுவராஜ்ஜை விட்டு விசாரிக்கச் சொல்றேன்...''

''வேண்டாம்... எனக்கு யாராவது துணை இருந்தாப் போதும். நானே மெட்ராஸ் போயிடுவேன்...''

'சேச்சே... என் மேல நம்பிக்கை இல்லையா உனக்கு...''

ஜானகி தலை குனிந்தாள்.

எப்படிச் சொல்வாள்... அந்த இடத்தில் தன்னைப் போன்ற ஒரு குடும்பப் பெண் நிற்பதே தவறு என்பதை...

இது சோனாவுக்கு மட்டும் தெரியாதா என்ன...

ஒரு வேளை, நம்மையும் இந்தத் தொழிலில் ஈடுபடுத்துவதுதான் இவளதுத் திட்டமாக இருக்குமோ?



இருக்குமோ என்ன... அதுதான்...அதேதான்... முதலில் நயமாகச் சொல்லுவாள். பிறகு மிரட்டுவாள். சோறு போடாமல் பட்டினி போடுவாள்... ஆள் வைத்து அடிக்கச் சொல்லுவாள்...

''ஐயோ!''

ஜானகி, கண்களை இறுக மூடிக் கொண்டு அலறினாள்...

''என்ன... என்ன...''

யுவராஜ், பதறிக் கொண்டு ஓடி வந்தான். சோனா, ஜானகியின் தலையைத் தன் தோளின் மீது சாய்த்துக் கொண்டே யுவராஜ்ஜிடம் சொன்னாள்:

''யுவராஜ்... தங்கச்சி ரொம்பவும் பயந்திருக்க பிள்ளை பெத்தப் பச்சை உடம்புல இப்படி பயந்துகிட்டா ஜன்னி கண்டுடும். நீ போய் நம்ம மொய்தீன் பக்கிரை அழைச்சிட்டு வா... அவர் வந்து மூனு வேளை ஓதி, மயிலிறகாலே விசிறினா எல்லாம் சரியாப் போயிடும்.''

கிளம்பியவளின் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள் ஜானகி...

''அம்மா...''

''என்னை சோனான்னு கூப்பிடு... இல்லே சோனா அக்கான்னு கூப்பிடு...''

''சரி... சோனா அக்கா... இந்த இடத்துல எனக்கு இருக்க பிடிக்கலே...''

சோனா அழகிய புருவத்தை வில்லாய் வளைக்கிறாள்.

''ஏன்?''

''நான் இங்கே இருந்துட்டு வந்தேன்னு தெரிஞ்சாலே, என் கணவர் மறுபடியும் என்னை வீட்டுக்குள்ள சேர்த்துப்

பூராளன்னு சந்தேகம்தான். அதுவும், அவர் ஒத்துட்டாலும், என் மாமியார் கண்டிப்பா எதிர்த்துக் குரல் கொடுப்பா...''

''அப்ப ரொம்ப நல்லதாப் போச்சு. நீ என் கூடவே இருந்துடு!''

சோனா, கண் சிமிட்டிச் சிரிக்கிறாள்.

ஜானகிக்கு இனம் புரியாத பயம் வயிற்றைக் கலக்கியது. தைரியத்தை வலுக்கட்டாயமாய் வரவழைத்துக் கொண்டு, சோனாவிடம் படபடத்தாள்.

''நீ என்னை என்ன செய்யலாம்னு இருக்கே? என்னையும் இந்தத் தொழில்லே.... அய்யோ... உனக்கு எத்தனை பணம் வேணும் சொல்லு. நான் என் கணவர்கிட்ட சொல்லி ஏற்பாடு செய்யச் சொல்றேன். என்னை ஒண்ணும் செஞ்சிடாதே தாயே...''

''அடடா...''

எழுந்து நின்ற சோனா, மறுபடியும் உட்கார்ந்தாள்.

''ஜானு... நீ என்னைப் பத்தியும் நான் செய்யற இந்தத் தொழில் பத்தியும் தப்பா நினைச்சிட்டே.... இங்கே பாரு... இந்தத் தெரு முழுக்க இந்த வியாபாரம்தான் நடக்கறது. ஒரு வீட்டுக்குள்ள போனா — அம்பது நூறு பொண்ணுங்க இருப்பாங்க... சாதாரண குடும்பப் பொண்ணா இந்தத் தெருவுல பயமில்லாம நடக்க முடியாது... அப்படியே எவளையாவது பிடிச்சிட்டு வந்தாலும் ஒரே இடத்துல வச்சிருக்க மாட்டாங்க.... ஒரு மணி நேரத்துக்குள்ள பொண்ணு நாலஞ்சு கை மாறிடும். எப்பேர்பட்ட போலிஸும் இங்கே ஒண்ணும் செஞ்சுக்க முடியாது...''

இதைச் சொல்லிவிட்டு சோனா, ஜானகியை உற்றுப் பார்த்துச் சிரிக்கிறாள்.



''ஆனாலும், அத்தனை இடத்துலேயும் இந்த சோனா பேரைச் சொல்லு... கையெடுத்துக் கும்பிடுவாங்க. காரணம் — நான் செய்யற தொழில்லே ஒரு நியாயம் வச்சிருக்கேன்.. எந்தவொரு குடும்பப் பொண்ணையும் பலவந்தமா நாக்கிட்டு வந்து, இந்தத் தொழில்லே ஈடுபடுத்தலே... என்கிட்ட இருக்கறவங்க, அவங்களா வந்து சேர்ந்தவங்க, பொழப்புக்கு வேற வழி தெரியாம இப்படி ஆனவங்க... ஆறு மாசத்துக்கு ஒரு தடவை யுவராஜ்ஜை மெட்ராஸ், ஹைதராபாத் இங்கேயெல்லாம் அனுப்புவேன்... அந்தந்த ஊருல நம்ம ஆளுங்க இருக்காங்க... அவங்க பார்த்து, பொண்ணுங்களை அனுப்ப எற்பாடு செய்வாங்க... வர்ற பொண்ணுங்களோட முழு சம்மதத்தோடதான நான் உள்ளேயே சேர்ப்பேன்...''

சோனா பேசிக் கொண்டே போனாள்...

அவளைப் பற்றி... அங்கிருந்த பெண்களைப் பற்றி... யுவராஜ் பற்றி...

''உன் புருஷன் கிட்ட உன்னைச் சேர்க்க வேண்டியது என் பொறுப்பு...''

அவள் இப்படிச் சொன்னதும் ஜானகிக்குச் சிறிது பயம் விலகியது...

நல்ல நினைவோடு பத்து நாட்கள் போல அந்தவீட்டில் ஜானகி வளைய வந்த போதே — சோனாவைப் பற்றி நிறைய தெரிந்து கொண்டு விட்டாள்.

சோனா அந்த இடத்தைத் தனது 'தொழிற்சாலை'யாக வைத்திருந்தாளே தவிர — அவள் வீடு, பம்பாயின் மிகச் சிறப்பானப் பகுதியான 'மகாலட்சுமி லே அவுட்'டில் இருந்தது.

தினமும் காலையும், மாலையும் வருவாள்... அந்த வீட்டிலேயே சற்று முதிர்ந்தவளானப் பெண்மணி ஒருத்தி

கணக்கு வழக்குகளை ஒப்பிப்பாள்... யுவராஜ் — வரவு செலவுப் பட்டியலைப் போட்டுத் தருவான்.

"இவள் உள்ளே நுழையும்போதே — அங்குள்ள பெண்கள் குதித்துக் கும்மாளமிடுவார்கள்.

"ஆயியே... ஆயியே... சோனா. பஹன் ஆயியே!"

சப்பாத்தியோ, சாப்பாடோ— அவர்களுடன் கலகல வெனச் சிரித்துப் பேசியபடியே சாப்பிடுவாள் சோனா...

அந்தச் சமயத்தில் ஒவ்வொரு பெண்ணையும் அழைத்து வாஞ்சையுடன் விசாரிப்பாள்.

"ஷீலா... ஊருக்குப் பணம் அனுப்பணும்னு சொன்னியே... அனுப்பிட்டியா..."

"இன்னிக்கு அனுப்பறேன் ஜீ..."

"இத்தனை நாள் என்ன பண்ணிட்டிருந்தே... யுவராஜ் கிட்ட கேட்டு மணியார்டர் ஃபாரம் வாங்கிக்க வேண்டியது தானே... அமுதா..."

"இங்கே இருக்கேன் சோனாஜீ..."

"உன்னோட மெடிகல் ரிசல்ட் வந்துடுச்சு. நீ பயப்பட்ட மாதிரி ஒன்னுமில்லே... எதுக்கும் இந்த டானிக்கை சாப்பிடு... அனீமிக்கா இருக்கும்னுதான் டாக்டர் சொல்றாரு..."

"அம்மாடி... பொழச்சேன்..."

சோனா, அடுத்தவள் பக்கம் திரும்புவாள்.

"யாரிது விபுவா... ஆளே அடையாளம் தெரியலையே இந்த டிரஸ் உனக்கு ரொம்ப நல்லாயிருக்கு.



விபு... என் கண்ணே பட்டுடும் போல இருக்கு. இன்னும் ரெண்டு செட் தச்சுத் தரட்டுமா—"

"......—"

கவிதா... உன்னை யாரு புருவத்தை இத்தனை மெல்லிசா டிரிம் பண்ணிக்கச் சொன்னது? அதுக்கு முன்னாலே என்னை ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமில்லே... உன் முகத்துக்குப் பெரிய புருவம்தாம்மா அழகு—"

இப்படியொரு பக்கம் அழகுக் குறிப்புகளை அள்ளியள்ளி தருவாள்...

ஆனால்—

எவளாவது 'என் தங்கையைப் படிக்க வைக்க வேண்டும்' என்றாலோ— 'என் பொண்ணுக்குச் சம்பளம் கட்டப் பணம் வேண்டும்' என்றாலோ, முகம் மாறிவிடும்.

"படிக்க வச்சு என்ன செய்யப் போறீங்க?"

"என்ன சோனா இப்படிக் கேட்கறீங்க... ஒரு குழந்தைக்குப் படிப்பு வேணாமா?"

"வேணாம். வீட்டுல வச்சு எழுதப் படிக்க கத்துக் கொடுக்கச் சொல்லுங்க. கையில காசு கொடுத்து—கணக்குப் பார்த்து செலவழிக்கக் கத்துக் கொடுக்கச் சொல்லுங்க. போதும். இவங்க பாட்டுக்கு டாக்டருக்கும், இன்ஜினியருக்கும் படிச்சிட்டு, வாழ்க்கைப் படிப்பைக் கோட்டை விட்டுடறாங்க..."

ஜானகி அதிகம் இந்தப் பெண்கள் புழங்கும் முன் பகுதிக்கு செல்வதே இல்லை. இதே வீட்டின் பின்னால் சோனா, தான் வந்தால் தங்குவதற்கென்று வைத்திருந்த ஒரு அறையைத்தான் இப்பொழுது ஜானகிக்காக கொடுத்திருந்தாள்.

அறை ஜன்னலில் அமர்ந்தாலே — முன் கூடத்தில் நடக்கிற ஒவ்வொரு சம்பாஷணையும் அவள் காதில் விழும்.

மற்றபடி வேறு யார் வருகிறார்கள்... இந்தப் பெண்கள் அவர்களை அந்த வீட்டின் எந்தப் பகுதிக்கு அழைத்துப் போகிறார்கள் என்பதே ஏதோ கண்கட்டு வித்தை போல இருந்தது ஜானகிக்கு.

சோனாவுக்கு கல்வியின் மீது இத்தனை வெறுப்பு உண்டானதற்கான காரணத்தை ஒரு நாள் அவளே ஜானகியிடம் சொன்னாள்.

''எனக்கு ஒரு தங்கை இருந்தா ஜானு... அசப்புல பார்த்தா உன்னை மாதிரியே இருப்பா... அவளுக்கும் எனக்கும் பத்து வயசு வித்தியாசம். கீதான்னு பேரு... டாக்டருக்குப் படிக்கணும்னு ஆசைப்பட்டா... நான் வெறும் எட்டாம் கிளாஸ்தான்...''

சொல்லும்போதே சோனாவுக்குக் கண் கலங்கிவிட்டது.

சோனாவுக்குப் பதினாறு வயசில் கல்யாணம் நடந்ததாம். மாப்பிள்ளைக்கு அப்பொழுதே முப்பது வயதாம்... அவர்கள் குல வழக்கப்படி ஏராளமான நகை, புடைவை, சீர் செனத்தியுடன் புகுந்த வீட்டுக்கு வந்த பின்தான் சோனாவுக்குத் தெரிய வந்தது...

தன்னை வாங்கியவன், தன்னை வைத்துக் குடும்பம் நடத்துவதற்காக வாங்கவில்லை... வியாபாரம் செய்யத்தான் வாங்கியிருக்கிறான் என்பது...

அந்த வயசில் அவளது அழுகையும் ஆர்ப்பாட்டமும் புகுந்த வீட்டில் செல்லுபடியாகவில்லை... பிறந்த வீட்டுக்கு ஓடிவந்து நடந்ததைச் சொல்லி அழுதிருக்கிறாள்.



பெற்றவர்கள் இந்தத் துயரம் தாங்காது ஒருவர் பின் ஒருவராய் கண்ணை மூட, தனது ஒரே தங்கையான நாலு வயசு கீதாவுடன் வேறு போக்கிடம் தெரியாமல் அலை பாய்ந்திருக்கிறாள் சோனா.

மறுபடியும் அவள் கணவன் அவளை வலை வீசிப் பிடித்தான். இப்பொழுது அவளை, தன் இஷ்டத்துக்கு மசிய வைக்க ஒரு கருவி கிடைத்து விட்டது.

அதுதான் கீதா.

''உனக்கு உன் தங்கை நல்லாயிருக்கணும் இல்லே... அப்படியானா நான் சொல்ற பேச்சைக் கேளு...''

வேறு வழியில்லை. ஒத்துப் போக மறுத்தால் — அவள் மட்டும் பட்டினியில்லை. பச்சிளம் குழந்தையான கீதாவையும் பசியில் துடிக்க வைத்தான் அந்த மனிதன்.

வயதில் சின்னவளானாலும் அப்பொழுதே சோனா தீர்மானித்து விட்டாள்.

'இனிமேல் நமக்கு குடும்ப வாழ்க்கை இல்லை. குறைந்த பட்சம் — நம் தங்கையாவது நன்றாக இருக்கவேண்டும்...'

எப்பொழுது இந்த எண்ணம் தோன்றியதோ — அப்பொழுதே தங்கையை ஹாஸ்டலில் சேர்த்தாள். தன் வீட்டுக்கும், தனது தொழில் நடக்கும் இடத்துக்கும் கொஞ்சம் கூட சம்பந்தமில்லாதபடி இடத்தை மாற்றினாள்.

பணப் பிசாசானக் கணவனையும், அவனது குடும்பத்தினரையும் தான் கொண்டு வரும் கரன்சியினால் வாயடைக்க வைத்தாள். அவர்களும் எலும்புத் துண்டைப் பார்த்த நாய் குட்டிகளைப் போல, வாலாட்டத் தொடங்கினார்கள்.

கீதாவின் பாதம் தன் வீட்டுப் பக்கமே படாமல் — சோனாவே ஹாஸ்டலுக்குப் போய் பார்த்து, வேண்டியதை வாங்கிக் கொடுத்து...

கீதாவுக்கும் அக்கா படும் கஷ்டங்கள் புரிந்துதான் இருந்தது.

"அக்கா, நான் மட்டும் டாக்டராயிட்டேன்னா — அப்புறம் நீ இந்த கண்டராவி எல்லாத்தையும் விட்டுட லாம். 'டாக்டர் சோவோட அக்கா'ன்னு பெருமையா சொல்லிட்டு, என்கூட, என் வீட்டோட இருந்துடலாம்..."

சோனாவுக்கு அதைக் கேட்கும்போதே உச்சி குளிர்ந்து விடும்.

அத்தனை தெம்பாய், நம்பிக்கையூட்டும் வண்ணம் பேசி, சிரித்து, பட்டாம்பூச்சி போல வளைய வந்த சோ— மெடிகல் காலேஜில் கடைசி வருடப் படிப்பை முடிப்ப தற்குச் சில மாதங்களுக்கு முன்பு — தூக்கு போட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டாள்.

'ஏன்... ஏன்...' கதறியழுத சோனாவுக்கு, சோவின் சிநேகிதிகள் சொன்ன தகவல்...

"சோ எங்க கிளாஸ்லே படிக்கிற மோகன்கற பையனை விரும்பினா... ரெண்டு பேருமே படிப்பை முடிச் சுட்டு கல்யாணம் செஞ்சுக்கறதா இருந்தாங்க. சோ இதை, படிப்பை முடிச்ச கையோட உங்க கிட்ட சொல் றதா இருந்தா... ஆனா, மோகன் திடீர்னு தனக்கு ஊர்லே கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டதா சொல்லி, இவளை கை கழுவிட்டான். அதான்... இவ ரொம்ப வருத்தமா...ரெண்டு நாளா, சரியா சாப்பிடக் கூட இல்லே அவ—"

"அதுக்காகவா சாகணும் ஒருத்தி... இவன் இல்லை யின்னா ஆயிரம் மாப்பிள்ளை... நான் பார்க்க மாட் டேனா..."

கதறித் துடித்தவளுக்கு விடையளிப்பது போல — சோ வின் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்...

சோ மட்டும் சாகவில்லை.... அவனுடன் சேர்ந்து அவள் வயிற்றிலிருந்த நாலு மாதக் கருவும்....—



சோனா இந்தச் சொன்னபோது, ஜானகி, தனது நிலைமையைக்கூட ஒரு கணம் மறந்து, திகைத்துப்போய் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"எவ்வளவு படிக்க வச்சேன்? என் தங்கை வெறும் டாக்டரா மட்டுமில்லே... இந்த சமுதாயத்துல பொம்பி ளைங்களுக்கு நடக்கிற அநியாயத்தை எல்லாம் தட்டிக் கேட்கற ஒரு அர்காதேவி மாதிரி வலம் வருவான்னு எல் லாம் கற்பனை செஞ்சேன்... அவ என்னடான்னா—எவனோ ஒரு கயவன் ஏமாத்திட்டதுனால — விலை மதிக்கவே முடி யாத உசிரை அழிச்சிட்டாளே... நீயே சொல்லு ஜானகி... இந்தப் படிப்பு என் தங்கச்சிகிட்ட இருந்த தன்னம்பிக்கை யையும், தைரியத்தையும் எடுத்துடுச்சா? இதுவே நானா யிருந்தா — 'ச்சீ, போடா தைரியமில்லாதப் பொட்டை' யின்னு நாலு பேருக்கு முன்னாலே திட்டி அவன் மானத்தை வாங்கியிருப்பேன்...உசிர் இருந்தா—இவனுங்களை கடைசிக் மூச்சு இருக்கற வரைக்கும் போட்டு புரட்டி நார் நாராக் கிழிச்சிருப்பேன்..."

சோனா ஜானகியின் மடியிலிருந்த பாபுவை எடுத்து முகத்தோடு முகம் வைத்துக் கொஞ்சினாள்.

"நீ கூடப் படிக்காதேடா... படிச்ச மனுஷனுக்கு மூளை வக்கிரமாத்தான் வேலை செய்யும். முதுகெலும்பு இல்லாதக் கோழையாக்கும். நீ உழைச்சு சம்பாதி. வீரனா இரு..."

அந்தக் கணத்தில் ஜானகி அறிந்திருக்கவில்லை...

# 5

"தேவி...திரு என்ன சொல்றா..."

ஜெகன் பதறுகிறான். தேவி, 'அவள் தூங்கட்டும்' என்பது போல கண் சாடை செய்கிறாள்...

திருபமாவுக்கு ஒரு பழக்கம். அப்பா, அம்மா இருவருக்கும் நடுவில் படுத்து இரண்டு பேர் மீதும் இரண்டு கால்களைப் பிரித்துப் போட்டுக் கொண்டு தூங்குவது...

ஜெகன், மகள் தூங்கும் வரையில் பொறுமையில்லாதவனாய் தவிக்கிறான்...

திருபமாவின் செப்பு வாய் மெள்ளத் திறக்க-சீரான மூச்சு சத்தம் வந்தவுடன், அவளது காலை எடுத்து தலையணை மீது வைத்து விட்டு, இருவரும் ஹாலுக்கு வருகிறார்கள்...

"தேவி..."

அவள் நிமிர்ந்து ஜெகனை முழுசாய் தனது கண்களுக்குள் வாங்கியபடிச் சொல்கிறாள்.

"அக்கா உசிரோட இருக்காங்க...."

"என்னது—எங்கே?"

அவன் பதறிப் போய் எழுந்து வந்து அவளதுத் தோள் பட்டையைப் பிடித்துக் குலுக்குகிறான்.



"ஜானகியா...என் ஜானுவா—எங்கே தேவி...... பார்த்தியா...இங்கே வந்தாளா...இந்த இடம் தேடி... கடவுளே...அய்யோ!...தேவி...ஏன் பேசாம இருக்கே... ஏதாவது பேசேன்...இப்ப அவ எங்கே?"

தேவி, கண்களில் துளிர்த்த நீரைச் சுண்டி விட்டபடி அன்று மாலை நடந்ததை எல்லாம் சொல்கிறாள்.

"அவளை ஏன் தேவி அனுப்பினே...அவ எங்கே போவா...நான் வர்ற வரைக்கும்...என் குழந்தை உசிரோட இருக்கா? எப்படி இருக்கா தேவி....என்னை மாதிரியா.... திரு மாதிரியா...ஒரு கால் இல்லையா...என் குழந்தைக்கு ஒரு கால் ஊனமா...விதியப்பாரு தேவி...

ஜெகன் அழுகிறான். சிரிக்கிறான். உணர்ச்சி மேலீட்டில் தேவியின் கன்னத்தில் மாறி மாறி முத்தமிடுகிறான்.

"அந்த அட்ரஸ் எங்கே...தேவி, இப்பவே காரை எடுத்திட்டு போயிட்டு வரட்டுமா...ஜானகி...என் ஜானகி எப்படி இருக்கா...கொஞ்சம் சொல்லேன்..."

தேவி மெல்லியப் புன்னகையுடன் ஒரு விநாடி அவனையே கண் கொட்டாது பார்க்கிறாள்.

"என்ன தேவி...பேச மாட்டேங்கறே?"

"ஒண்ணுமில்லே. அக்காவையும் குழந்தையையும் நாளைக்குப் போய் பார்க்கப் போறோம் இல்லையா? அதுக்கு அப்புறம் என்ன செய்யப் போறோம்?"

"இது என்ன கேள்வி தேவி...அவங்களை கையோட அழைச்சிட்டு வந்துட வேண்டியதுதானே? இத்தனை வருஷமா எங்கே இருந்தாங்களோ—என்னமோ...திரு. அம்மாவைப் பார்த்துட்டு என்ன சொல்லிச்சு?"

தேவி, ஜானகி மகளை வாரி அணைத்துக் கொண்டதையும், அவள் திமிறிக் கொண்டு தன்னிடம் ஓடி வந்து விட்டதையும் சொல்கிறாள்.

"இங்கே பாருங்க. நிருபமா ஒண்ணும் குழந்தை இல்லே—ஓரளவுக்கு விவரம் தெரிஞ்சவ. இத்தனை நாளும் 'அம்மா அம்மான்'னு தான் கொஞ்சி விளையாடிட்டு இருந்தது தன்னோட அம்மா இல்லே...இதோ, இதுதான் உன்னோட நிஜ அம்மான்னு அவ கிட்ட சொன்னா குழந்தை மனசு என்ன பாடு படும்னு யோசியுங்க...இதோ எனக்கே தாங்கலே—"

தேவி, திடீரென விம்மியழத் தொடங்கி விட்டாள்.

இப்பொழுதுதான் ஜெகனுக்கு அந்த மாபெரும் உண்மை மண்டையில் உரைக்கிறது.

ஆமாம்—ஜானகியும், குழந்தையும் வந்து இங்கேயே தங்கினால் நிருபமாவிடம் என்னவென்று சொல்வது?

ஏதோ இப்போதைக்கு வேண்டுமானால்- 'நமக்கு தெரிந்தவர்கள்...ஒரே வீட்டில் குடியிருந்தவர்கள்' என்று சொல்லி மழுப்பலாம்.

எத்தனை நாளைக்கு இந்தப் பொய்யைக் காப்பாற்ற முடியும்?

வேண்டாம்....நிருபமாவிடம் பக்குவமாகச் சொல்லி- 'ஜானகிதான் அம்மா-தேவி, உன்னை வளர்த்தவள்தான்' என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிய வைத்தால்...

தேவியின் நிலைமை என்ன?

நிருபமா வளர்ந்து, கல்யாண வயசில் நிற்கும் போது, தனக்கு மட்டும் இரண்டு அம்மாக்கள் இருக்கும் அவலத்தை நினைத்து கூசிக் குறுகிப் போகமாட்டாளா?

"என்னைப் பெற்றவள்தான் வந்து விட்டாளே.... இன்னமும் எதற்காக நீ இங்கே இருக்கிறாய்-"



இப்படி தேவியைக் கேட்டு விட்டால்...

தேவி தாங்கவே மாட்டாளே....

குழந்தையை, மார்பின் மீதும், தோளின் மீதும் போட்டு எப்படி வளர்த்திருக்கிறாள்....

'சரி...நிருபமாவை விடு...நான் என்ன செய்யப் போகிறேன்....'

'இத்தனைக் காலம் கழித்து, மீண்டும் புதுப்பிறவி எடுத்து வந்திருக்கிற என் ஜானகியை நான் மனசார வரவேற்க வேண்டாமா—'

'அப்படி அவள் வந்து விட்டால் தேவியின் நிலை என்ன...'

குழம்பிப் போகிறான் ஜெகன். தலையில் கைவைத்தபடி சோபாவில் சாய்கிறான்.

"தேவி—எனக்கு ஒண்ணுமே புரியலே - தலை சுத்துது...."

தேவி, அமைதியாய் அவனருகில் வந்து அவனை எழுப்பி படுக்கைக்கு அழைத்துப் போகிறாள்.

"எதுவானாலும் காலையில நிருபமாவைக் கொண்டு போயி அவ அத்தை வீட்டுல விளையாட விட்டுட்டு அங்கே அக்காவைப் பார்க்கப் போறப்ப பேசிக்கலாம்..."

சொன்னாளே தவிர-அவளால் அப்படி நிம்மதியாய் தூங்க முடியவில்லை.

குழந்தையை நடுவில் போட்டபடி படுத்திருந்தவள், சில நிமிடங்களில் மெதுவாக எழுந்து வந்து ஜெகனின் அருகில் படுத்து, அவனது கன்னத்தில் தன் கன்களைத் தேய்க்கிறாள்—

''ஏய்....தேவி...என்ன இது—என்னைச் சொல்லிட்டு...''

''இல்லே...என்னால தாங்க முடியலைம்மா''—அக்கா வந்ததுல எனக்கும் சந்தோஷமாகத்தான் இருக்கு. ஆனா... இனிமே என் நிலைமை என்னங்க...''

''சீச்சீ... அசடு மாதிரி இது என்ன கேள்வி?''

ஜெகன் இதைச் சொல்லும்போது, அவன் குரலையே அவனுக்கு அடையாளம் தெரியவில்லை.

தேவி விசும்பினாள்.

''எங்க, கல்யாண சமயத்துல எங்க வீட்டுல எனக்குன்னு கட்டில், பீரோ, பாத்திரம், பண்டம்னு எதையுமே வாங்கித் தரல்லே...எனக்கு அம்மாவும் இல்லே... என் அண்ணாவுக்கு அத்தனை வசதியும் இல்லே... நீங்களும், அங்கே வீட்டுல காபி பில்டர்லே இருந்து, இரும்பு சட்டி வரைக்கும் எல்லாமே இருக்குன்னு சொல்லிட்டீங்க... நான் வெறுங்கைய வீசிட்டு வந்தேன்''...

''—...''

''இங்கே வந்ததுக்கு அப்புறம் எனக்குன்னு ஒரு குழந்தையப் பெத்துக்கனும்னு கூட எனக்குத் தோணலை பாருங்க... என்னா, குடித்தனத்துக்கு எல்லா சாமானும் ரெடியா இருந்த மாதிரியே-என்னோடக் குழந்தை ஆசைக்கும் ஒரு குழந்தைய ரெடிமேடா வச்சிருந்தீங்க... எனக்குக் குழந்தை இல்லையேங்கற குறையே தெரியல... இப்ப அக்கா வந்ததுக்கு அப்புறம்-நான் எப்படி வெறுங் கையோட இங்கே வந்தேனோ... அது மாதிரியேத்தான் திரும்பி...''

ஜெகன், தனது மார்பில் முகம் புதைத்து அழுத தேவியை அப்படியே இறுகத் தழுவி முத்தமிடுகிறான்.

''உன்னை நான் எங்கேயும் தனியா விட்டுட மாட்டேன்டா...தூங்கு...''



''இல்லே... எனக்கு ஒரு குழந்தை வேணும்...எனக்கே எனக்கு...உங்களோடக் குழந்தை... நிருபமா மாதிரி-இன்னொரு குட்டி நிருபமா...''

இதைச் சொல்லும் போதே பொங்கிப் பொங்கி அழுகிறாள் அவள்.

இரவு முழுக்க அவளைச் சமாதானப் படுத்துவதிலேயே...

முதன் முதலாக-'ஜானகி திரும்பி வந்திருக்கிறாள்' என்பதைக் கேட்டபோது அவனுக்கு ஏற்பட்ட உற்சாகமும், அளவிட முடியாத ஆனந்தமும்-அந்த இரவு முழுவதற்குள்ளாக மெள்ள மெள்ள வடிந்து விட்டது.

கழுத்தின் மீது பெரிய பாறாங்கல்லைத் தூக்கி வைத்தாற் போல உணர்கிறான்.

காலையில் எழுந்தவுடனேயே நிருபமா கேட்கிறாள்.

''என் ரெண்டு பேரும் மூஞ்சிய என்னமோ மாதிரி வச்சுக்கிட்டிருக்கீங்க? சண்டையா?''

''இல்லேடா...தலைவலி...''

''அது எப்படி ரெண்டு பேருக்கும் ஒரே சமயத்துல தலைய வலிக்கும்?''

அவளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கக்கூடப் பொறுமையில்லை ஜெகனுக்கு.

''சரி....சரி...எல்லாம் அப்புறம் சொல்றேன். நீ இப்ப சீக்கிரமா குளிக்க வா—நேரமாச்சு...''

''எங்கே போறோம்?''

''உன்னைக் கொண்டு போய் உங்க அத்தை வீட்டுல விட்டுட்டு, நானும் அம்மாவும் ஒரு ஃபிரண்டைப் பார்க்கப்போறோம்....''

''எனக்குத் தெரியும்; அந்த ஃபிரண்டு யாருன்னு-நேத்து வந்தாங்களே, ஜானகி ஆன்ட்டியின்னு... ஒரு நொண்டிப் பையனை அழைச்சிட்டு...''

நிருபமாவின் கவனைக் கழற்றிக் கொண்டிருந்த ஜெகன், ஆத்திரத்தில் தன்னை மறந்து, நெமியின் முதுகில் 'சுள்' ளென ஒரு அறை விடுகிறான்.

சமையலறையில் ஏதோ வேலையாய் இருந்த தேவி ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

நிருபமா, தந்தையையே கண்ணீர் ததும்ப முறைத்துப் பார்க்கிறாள்.

'நொண்டியின்னு சொல்லாதே... ஓவராச் செல்லம் கொடுத்து வாய் வளர்ந்திருக்கு நிறைய...''

அடிக்கும் அப்பா இது வரையில் அறிமுகமானதே இல்லை குழந்தைக்கு. அவளுக்கு நினைவு தெரிந்து, அவன் வாங்கும் முதல் அறை இது தான். ஆத்திரத்தில் மூக மூசென்று வேகமாய் மூச்சு இழைக்கிறது. ரோஜா உதடுகள் நெளிந்து, பிதுங்கி, அழுகையில் வெடிக்கிறது,

''நொண்டிய நொண்டியின்னு சொல்லாம வேற என்னன்னு சொல்றதாம்...''

''அவன் பேரைச் சொல்லு—''

''எனக்கு அவன் பேரு தெரியாது...''

''தெரியாதுன்னா, உன் பேரென்னன்னு கேட்டுத் தெரிஞ்சிக்கிறது. இத்தனைப் பேசறே இல்லே?''

இதற்குள் தேவி அங்கு ஓடி வருகிறாள்.
''நகருங்க—நீங்க ஒண்ணும் குழந்தையக் குளிப்பாட்டி விட வேண்டாம். நானே கவனிச்சுக்கறேன்— நீ வாம்மா—''



இந்த சம்பவத்துக்குப் பிறகு, அத்தை வீட்டில் இறங்கும் வரையில் நிருபமா, தன் தந்தையிடம் பேசவே இல்லை. தன் கையில் ஒரு பொம்மையை அணைத்துக் கொண்டு இறங்கியவள், முகத்தை வேறு பக்கமாய் திருப்பிக் கொள்கிறாள்.

''நிரு... அப்பாவுக்கு டாடா சொல்லும்மா...''

தேவிதான் கெஞ்சுகிறாள்.

''முடியாது உனக்கு மட்டும்தான் டாடா...''

நெமி, அழுகையை அடக்க முடியாமல் உள்ளே ஓட, தேவி அவள் செல்வதையே கவலையுடன் பார்த்துக் கொண்டு...

''புறப்படலாமா தேவி...''

''உம்—''

கார் அந்தத் தெருவைத் தாண்டியதும் தேவி கணவனை 'பிலு பிலு' வெனப் பிடித்துக்கொள்கிறாள்.

''ஒவ்வொரு சமயம், நீங்க எப்படித்தான் ஆபீஸ்லே அத்தனைப் பேரையும் சமாளிச்சு, பிரமோஷனுக்கு மேல பிரமோஷனும் வாங்கியிருக்கீங்கன்னு தெரியலே... ஒரு குழந்தைய சமாளிக்கத் தெரியலயே உங்களுக்கு—''

''இல்லே தேவி. நிருவுக்கு நாம ரொம்பவும் செல்லம் கொடுத்து வளர்த்துட்டோமோன்னு தோணுது... பாரேன்—மண்டையில் அடிக்கிற மாதிரி 'நொண்டி'யின்னு சொல்றா...அவகூடப் பொறந்த தம்பியப் போய்...''

''அது தன் தம்பியின்னு அவளுக்குத் தெரியுமா? நாமும் தானாகட்டும். இப்ப நம்ம வீட்டுக் குழந்தைக்கே கால் ஊனமா இருக்கத் தொட்டுத்தான் இந்த 'நொண்டி' என்ற வார்த்தை நம்ம மனசுக்குள்ள புகுந்து. இத்தனை

ஆழமான பாதிப்பை எத்படுத்துது...அப்படியில்லையின்னு வச்சுக்குங்க...நமக்கும் அந்த வார்த்தை உண்டு பண்ணற வலி தெரியாதில்லையா?"

ஜெகன் இதற்குப் பதிலே பேசவில்லை. மௌனமாய் வண்டியைச் செலுத்துகிறான். தேவிதான் பேசிக் கொண்டே வருகிறாள்;

"எப்படியோ சொல்லி சமாளிச்சுக்கலாம்...அக்காவையும், குழந்தையையும் நம்மகூட கொண்டுவந்து வச்சுக்கலாம்னு நான் ஏதேதோ குருட்டு யோசனை எல்லாம் செஞ்சிட்டிருந்தேன். உங்களால ஆன உபகாரம் - முதல் வேலையா - நிருபமாவுக்கு அந்தப் பிள்ளையைக் கண்டாலே ஆகாதபடி செஞ்சிட்டீங்க..."

"நீ என்ன சொல்றே தேவி...."

'பின்னே என்ன... உங்களுக்குப் பிள்ளை பாசம் - அவ அப்படிச் சொன்னவுடனே 'பட்'டுனு ஒண்ணு முதுகுல வச்சிட்டீங்க...இனிமே என்ன ஆகும்னு கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தீங்களா...அந்தப் பையனைப் பார்த்தவுடனே, நிருவுக்கு, தான் அவனால அப்பா கிட்ட வாங்கின 'முதல் அடி' தான் ஞாபகத்தில் வரும்...."

ஜெகன் பிரமை பிடித்தாற்போல உட்கார்ந்து விட்டான்.

"காரைப் பார்த்து ஓட்டுங்க ..."

தேவிதான் அவ்வப்பொழுது எச்சரிக்க வேண்டியிருக்கிறது.

ஜெகன் - இந்த சந்திப்பே பயத்தை உண்டு பண்ணுவதாய்....

அடையாறுக்குள் நுழையும் முன்பே - கோட்டூர் புரச் சாலையில் ஒரு ஓரமாய் காரை நிறுத்தி விட்டு ஸ்டீய[illegible] மீது முகம் பதிக்கிறான் அவன்,



"என்னோட நேரம் சரியில்லேன்னு தோணறது தேவி... இனி மேல் வரப் போற பிரச்சனைகளை நான் எப்படி சமாளிக்கப் போறேனோ... தெரியலையே..."

தேவி அவனை அனுதாபத்துடன் பார்க்கிறாள்.

# 6

பரசுராம் கண் கொட்டாமல், ஜானகியையே பார்த்துக் கொண்டிருக்கிறார்.

பொழுது ஒரு பக்கம் விடியும் முன்பே ஜானகி குளித்து முடித்துத் தயாராகி விட்டாள். பாபுவையும் கிளப்பி, எழுப்பி - குளிக்க வைத்து நல்ல சட்டையாகப் போட்டு...

"என்னம்மா இன்னிக்கு... எங்கே போறோம்?"

"நேத்திக்கு நாம ஒரு வீட்டுக்குப் போனோம் இல்லே? அந்த ஆன்ட்டியும், அங்கிளும் இங்கே வரப் போறாங்க..."

குழந்தை அசுவாரஸ்யமாய் 'த்சு' என்றான். பரசுராமைப் பார்த்து 'குட் மார்னிங்' சொல்லி, கண்ணடித்துச் சிரித்தான்.

"லட்கி தேகோ சாப்...லட்கி...கித்னா ப்யார்...கித்னா சுந்தர்...கேர்ள்ஸ் சாப்...பியூட்டி ஃபுல் கேர்ள்ஸ்...."

பரசுராம் அவனை அடிப்பது போல கையை ஓங்கியபடிச் சிரிக்கிறார்.

''டேய் படவா...இந்த வார்த்தையெல்லாத்தையும் பாம்பேயிலே இருந்து கட்டிச் சுமந்துட்டு வந்துதிருக்கியா... உங்கம்மா காதுல விழுந்தா உதை படப் போறே...ஆமா... ரெண்டு வார்த்தை இங்கிலீஷ்லே படியின்னா படிக்கத் தெரியலே...''

சிறுவன் முகத்தை மூடிக் கொண்டு சிரிக்கிறான்.

''இப்படித் தானே யுவராஜ் அங்கிள் தெருவுல சொல்லிட்டே அலைவாரு...பரசு அங்கிள், நான் இப்ப இங்கே வந்துட்டேனே—நம்ம கஸ்டமருக்கெல்லாம் யார் கால் பிடிச்சு விடுவாங்க...யார் சிகரெட் வாங்கிட்டு வருவாங்க...பாவமில்லை அந்த அக்கா எல்லாம்...''

ஜானகி வேகமாய் வந்து, மகனைத் தன் புறம் திருப்புகிறாள்.

''டேய், சும்மா பம்பாய் பெருமையைப் பேத்திட்டே இருந்தே—வாயைப் பிளாஸ்திரி போட்டு ஒட்டிடுவேன்—அந்த யுவராஜ் மாதிரி லட்கி, லட்கின்னோ-கேர்ள்ஸ், கேர்ள்ஸ்னோ பேசிக் காட்டாதே—அப்புறம் அந்த கஸ்டமர்...அவங்களுக்கு நீ சேவை செய்யறது இதையெல்லாம் மறந்துடேன்...''

பரசுராம், சிறுவனைத் தூக்கி-வாசலில் கட்டப் பட்டிருந்த ஊஞ்சலில் கொண்டு உட்கார வைத்து விட்டு, மெள்ள உள்ளே வருகிறார்.

ஜானகி, விழி நீரைச் சுண்டி விடுகிறாள்.

அழாதே ஜானகி-அவன் என்ன...அர்த்தம் புரிஞ்சா இதையெல்லாம் சொல்றான்? சினிமாப் பாட்டை முனகற மாதிரி இதுவும் அவனுக்கு ஒரு பொழுது போக்கு ஆயிடுத்து. எல்லாம் நாளடைவுல ஸ்கூல்லே சேர்த்து படிக்க ஆரம்பிச்சா மறந்துடும்—''



''அது வரைக்கும் சொல்லுங்க...இப்பவே, இவன் அப்பா கேட்டா எப்படி மனசு பதை பதைச்சுப் போவார் அவர்?''

சொல்லும் போதே குரல் தழதழத்துப் போகிறது அவளுக்கு.

பரசுராமுக்கு அவளது ஆதங்கம் புரிகிறது.

எல்லாம் இந்த சோனாவினால் வந்தது...அவள் மட்டும் மனசு வைத்திருந்தால் எப்பொழுதோ-ஜானகியை அவளது புருஷனிடத்தில் ஒப்படைத்திருக்கலாம்.

அவள் ஏன் இதைச் செய்யவில்லை?

ஜானகியைத் தன் தொழிலுக்குப் பலியாக்கவும் அவள் விரும்பவில்லையே...

அப்புறம் என்ன?

சோனாவுக்கு-ஜானகி, ஏதோ ஒரு சாயலில் தோழியை நினைவு படுத்தினாள்.

அதனாலேயே அவளை அத்தனைச் சுலபத்தில் இழக்க மனசு வரவில்லை அவளுக்கு.

மேலும் அவள் ஒன்றை நிச்சயமாய் நம்பினாள்.

'இந்த ஆம்பிளைங்களே சுத்த மோசம். பெண்டாட்டி இருக்கறப்பவே வேற ஒருத்தியே தேடி வர்றவங்களை தினமும் பார்த்துட்டிருக்கோம். இதுல பெண்டாட்டி, பிள்ளை எல்லாத்தையும்இழந்தவளை-இந்த ஜனங்க சும்மா விடுவாங்களா—பிடிச்சு இத்தனை நேரம், மனையிலே உட்கார வச்சு, வேற ஒருத்தி கழுத்துல தாலியக் கட்ட வச்சிருக்க மாட்டாங்களா...'

'இந்த நிலையில இவ, கால் சரியில்லாத பிள்ளையையும் எடுத்துட்டு, அங்கே போய் நின்னா...அங்கே

இருக்கற நிலைமையைப் பார்த்து, மனசு உடைஞ்சு ஏதாவது செஞ்சுகிட்டா...!

'இதோ—அதோன்னு கொஞ்ச நாள் இழுத்தடிப்போம். அப்புறம், இந்த மாதிரி இடத்துல இருந்து வந்தவனை எப்படிம்மா ஏத்துப்பாங்கன்னு பதவிசா சொல்லி... இங்கேயே நிறுத்தி வச்சுடுவோம்...இங்கே இவளுக்கும் குழந்தைக்கும் என்ன குறைச்சல்—'

'என்னைக் கேட்டா— விசாரிச்சோம். அந்த ஆபீஸ் லேயே இல்லே. வேலைய விட்டு விட்டார், எங்கே போனார்னு தெரியலைன்னு சொல்லிடுவோம். நிம்மதி...'

சோனா இதுபற்றி யுவராஜ்ஜிடம் சொன்னபோது அவன்கூட. இவருடைய அன்பின் அசட்டுத்தனம் என்பதைக் கண்டித்தான்.

"சோனா...நான் சொல்றேனேயின்னு தப்பா நினைக் காதே...உனக்குத் தெரியாததில்லே. யோசிச்சு பாரு...ஒரு பொருளை நாம வாங்கினோம்னா-அதை நாம உபயோகிக் கணும். சும்மா, எதிரிலே வச்சு அழகு பார்த்திட்டிருக்கக் கூடாது. இல்லே-இவளை மறுபடியும் இவ கணவன் கிட்டேயே கொண்டு சேர்க்கணும்...ரெண்டுமில்லாம, தினமும் சாப்பாடு போட்டு—நல்ல துணிமணி கொடுத்து... கடைசியில தினமும் அவகிட்ட திட்டும் வாங்கிக் கணும்னு என்ன தலையெழுத்தா!"

"ம்..."

அவள் இதற்கு வழி என்ன என்று புரியாமல் யோசித்துக் கொண்டிருக்கையில்தான் பரசுராம் அந்த வீடு தேடி வந்தார்.

அவர் வந்த போது - ஜானகி, அங்கு சேர்ந்து இரண்டு வருடங்கள் ஆகி விட்டது.



முதல் சில மாதங்களிலேயே நம்பிக்கை விட்டுப் போய், ஒரு நாள் குழந்தையை எடுத்துக் கொண்டு, யாருக்கும் தெரியாமல் வெளியேறி விட்டாள் அவள்.

அது நாள் வரையில் அவள் - அந்தத் தெருப் பக்கமே வந்ததில்லை...ஆதலால் எந்தப் பக்கம் போனால் சுலபமாய் வெளியேற முடியும் என்றே தெரியவில்லை...

போதாக் குறைக்கு அவள் வெளியேற மாலை நேரத்தை வேறு தேர்ந்தெடுத்திருந்தாள்.

சாயங்காலத்தில் சந்தடி அதிகமாக இருக்கும். இருட்டில் முகம் தெரியாமல் கும்பலோடு கும்பலாய் நழுவி விடலாம் என்று அவள் திட்டம் போட்டிருக்க -

வெளியே வந்தால் திக்கு திசை தெரியவில்லை. எந்தப் பக்கம் திரும்பினாலும் பெண்கள்...பெண்கள்...வாசல் கதவும், ஜன்னல் விளிம்பும், பால் கனியும் கொத்து கொத்தாய் வண்ணப் பூக்களாய் பூத்திருப்பது போல... பெண்கள்...

தெருவில் கால் வைக்க முடியவில்லை...நாலடி எடுத்து வைப்பதற்குள் நாற்பது ஆண்கள் அவள் மீது மோதினார்கள்... பத்தடி நடப்பதற்குள் - இருபது பேர், அவளைக் கையைப் பிடித்து நிறுத்தினார்கள்.

"ஏய்...யார் நீ?"

"நான்...நான் சோனா..."

"ஓ...சோனாவோட ஆளா—"

"அ...ஆமாம்—"

"நல்லாத்தான் இருக்கே. இத்தனை ஜோரா ஒரு குட்டி தன் கிட்ட இருக்கறதா சோனா எங்க கிட்ட சொன்னதே இல்லையே—பேசாம, எங்க ஆளுங்களோட சேர்த்துடறியா...தினமும் உனக்கு புதுத்துணி கிடைக்கும்,

நம்ம கஸ்டமருங்க எல்லாம் பெரிய பெரிய முதலாளிங்க...''

''ச்சீ—விடு என்னை—''

''பாருடா... சோனா வீட்டு சிட்டுக் குருவி இந்தக் கத்து கத்துது—''

கண்ணீர் வழிய உடல் பதற, அவர்கள் தொட்ட இடமெங்கும் நெருப்பு பட்டாற் போல எரிய...

மறுபடியும் சோனாவின் வீட்டுக்குள் ஓடிப் போய் புகுந்து கொண்டு விடலாமெனப் பார்த்தால் எது அவன் வீடு என்றே தெரியவில்லை... தெருவே ஜெகஜ் ஜோதியாய் - எல்லா வீடுகளுமே ஏதோ கல்யாண சந்தோஷத்தில் மிதப்பது போல... இதில் ஆங்காங்கு இருந்து பாட்டு வேறு...

வழி தவறிய ஆட்டுக் குட்டி மாதிரி விழித்துக் கொண்டிருந்தவனை - சோனாதான் தோளைத் தட்டி தன் பக்கம் திருப்புகிறான்.

''எய் ஜானு—குழந்தைய வச்சுட்டு எங்கே இந்தப் பக்கம் வந்து நிக்கறே...''

''அது - அது வந்து...''

''வந்தாவது... போயாவது... வா என் கூட...நல்ல வேளை— இந்த நேரத்துல கார், இந்த சந்துக்குள்ள நுழைய முடியாததாலே நான், காரை ஒரு இடத்துலப் 'பார்க்' பண்ணிட்டு தெருவுல நடந்து வந்தேன்—''

அவன் குழந்தையை வாங்கிக் கொண்டு, ஜானகியின் ஒரு கையைப் பிடித்து 'தரதர' வென இழுத்துக் கொண்டு நடந்தான்...

அப்படி நடக்கும்போதே ஜானகியிடம் வம்பு செய்தவர்களுக்கு சோனா வசைமாரிப் பொழியாமல் இல்லை.



''முண்டங்களா...அக்கா தங்கச்சியோடப் பொறக்கலே...பெத்த தாயை கூட விலை பேசிடுவீங்களே நாய்களா''

''சோனா...ஸாரி சோனா... அவ உனக்கு உறவுன்னு தெரியாது தப்பா நினைச்சுக்காதே...''

''எப்படிடா தப்பா நினைக்காம இருக்க முடியும்? நாளைக்கு உன் தங்கச்சியெ அலங்காரம் செஞ்சு உட்கார்த்தி வை. இந்த சோனா, விலை பேச வர்றேன்.''

தெரு முழுக்க இரைந்து கொண்டே வந்தவன், அவனை அவனது இடத்தில் கொண்டு போய் சேர்த்துவிட்டு, அந்தக் கட்டடமே இடிந்து விழுந்து விடுவது போலக் கத்தினான்.

''யுவராஜ்...எய்,யுவராஜ்...''

''இதோ வந்தேன் சோனாஜீ... வெள்ளிக் கிழமை... மகாலட்சுமி பூஜை செஞ்—''

''பளார் !!!''

அவன், கன்னத்தில் கை பதித்து, அப்படியே பொறி கலங்கியவனாய் சோனாவையே கண் கொட்டாமல் பார்த்தான். ஜானகி, குழந்தையை மார்புற அணைத்தபடி சுவரோடு ஒட்டி நின்றாள்...கூடத்தில் இருந்த பெண்கள் கூட, சத்தம் கேட்டு ஓடி வந்து, இந்தக் காட்சியைப் பார்த்து விக்கித்து நின்றனர்.

''உனக்கு எதுக்குடா மகாலட்சுமி பூஜை... இதோ சித்த முன்னாடி என்னோட மகாலட்சுமிய தெருவுல இருக்கற ஓநாய்களும், கழுகுகளும் குறையாடப் பார்த்தாங்கடா... என் கண் முன்னே நிற்காதே... போ...''

அப்பா...அன்றைக்கு சோனாவுக்கு வந்த ஆத்திரம் போல என்றைக்குமே வந்ததில்லை—

யுவராஜ், அவளது காலில் விழுந்து மன்னிப்பு கேட்டான்.

ஜானகி கூட பயந்தாள். சோனா, தன் விஷயமாய் தானே - யுவராஜை அடித்தாள்—

கண்டிப்பாய் அவன் வீட்டுக்குப் போன பின் யுவராஜ் தன்னைப் பழி வாங்குவான் என்று நடுங்கிப் போனாள்.

ஆனால் யுவராஜ், சோனா போன பின் அவள் எதிரில் வந்து உட்கார்ந்தான்.

"இதப் பாரு—இங்கே என்ன உனக்கு குறை?"

"எனக்கு என் வீட்டுக்குப் போகணும்...ஆ...ஆ..."

ஜானகி வாய் விட்டு அழுதாள்.

"உன்னை உன் வீட்டுலதான் கொண்டு விடப் பபோறாங்க...உன் புருஷன் பழைய ஆபீஸ்லே இல்லே. அந்த வீட்டையும் காலி செஞ்சிட்டான். நாங்களும் அவன் இருக்கற இடத்தைத் தேடிட்டுத்தான் இருக்கோம். அது வரைக்கும் கொஞ்சம் பொறுமையா இரும்மா தாயே... இது மாதிரி, குழந்தையத் தூக்கிட்டு சவாரி கிளம்பிடாதே... நீ நினைக்கிற மாதிரி அத்தனை சாமான்யமான இடம் இல்லே இது. அப்புறம் துடுப்புக்கு பயந்து அடுப்புல விழுந்த கதையாயிடும்... ஆமா..."

இதைச் சொல்லி விட்டுக் கிளம்பியவன், என்ன நினைத்தானோ... பாபுவைத் தூக்கித் தன் இடுப்பில் வைத்துக் கொண்டான்.

"இதப்பாரு... இனிமே இவன், இந்த யுவராஜ் இடுப்புலதான் சவாரி செய்யப் போறான். பசிக்கிறப்ப, தூங்கறப்பதான் உன்கிட்ட வருவான். இவனை என்கிட்ட விட்டுட்டு நீ எங்கே போறதா இருந்தாலும் போ..."



ஜானகி விக்கித்து உட்கார்ந்து விட்டாள். யுவராஜ், தான் சொன்னது போலவே செய்தான்...

அவள் அங்கு வந்து சேர்ந்த இரண்டாவது வருடம் தான்...

பரசுராம்...

யுவராஜ்தான் - கூடத்தோடு கிளம்பியவரை பின் கட்டுக்கு அழைத்து வந்தான்.

"ஜானகிம்மா... இவங்க உங்களைப் பார்க்கணுமாம்..."

ஜானகி, தனது இருப்பிடத்தை விட்டு, வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருந்தாள்.

பரசுராம்... அப்போதே அவருக்கு நாற்பது வயதிருக்கும். உயரமும் பருமனுமாய் இருந்தாலும் முகத்தில் அலாதியானதொரு சாத்வீகம்...

"வணக்கம்மா..."

அவர், தமிழில் பேசியதே-ஜானகிக்கு உச்சந் தலையில் பன்னீரைக் கொட்டினாற் போலிருந்தது.

"வணக்கம்..."

இதற்குள் பாபு, கையில் பெரியதொரு இனிப்புப் பொட்டலத்துடன் தாயிடம் தாவினான்.

பரசுராம் சுற்றி வளைக்காமல் நேரடியாய் விஷயத்தைச் சொன்னார்.

"உங்களைப் பத்தி யுவராஜ் சொன்னான்... ரெண்டு வருஷங்களுக்கு முன்னாலே-நீங்க வந்த அதே ரயில்லே தான், நானும், என் மனைவியும், மூணு குழந்தைங்களும் வந்தோம்... நான் ஒரு ராணுவ வீரனா இருந்தேன்மா...

வீவுல டில்லி வந்து, குடும்பத்தை அழைச்சிட்டு, தென்னிந்தியாவுக்கு வந்து, கோவில் பிரார்த்தனைகளை எல்லாம் முடிச்சிட்டு திரும்பறப்பதான் இந்த விபத்து... என்னைத் தவிர-என் குடும்பத்துல யாருமே மிஞ்சலே...''

ஜானகி அவரையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''எனக்கும் இடது காலை எடுக்கும்படி ஆயிடுச்சு. ரொம்ப நாள் ஆஸ்பத்திரியில கிடந்தேன். உடல் ஊனமாயிட்டதாலே ராணுவத்தில் இருந்து ஓய்வு எடுத்துட்டேன்... என்னோட இழந்த காலுக்குப் பதிலா-வேற ஒரு செயற்கை காலை ஜெய்ப்பூர் ஆஸ்பத்திரியிலப் பொருத்தினாங்க...''

ஜானகி அவரை வியப்புடன் பார்த்தாள்.

அவராகச் சொல்லாவிட்டால்-அவரது இந்த பூட்ஸ் போட்ட காலையே யாரும் கவனிக்க மாட்டார்களே...

அவர், தரையில் தத்தித் தவழ்ந்து கொண்டிருந்த பாபுவை ஆசையோடு தூக்கிக் கொண்டார்.

''உங்க சம்மதம் கிடைச்சதுன்னா-குழந்தைய நான் எடுத்துட்டுப் போய்... என்னை மாதிரி காலைப் பொருத்தி அழைச்சிட்டு வர்றேன். இனிமே, இவன் வளர வளர இவனோடக் காலைப் பத்தின கவலைய நான் ஏத்துக்கறேன்...''

அன்று சந்தோஷத்தில் பேச்செழும்பாமல் நின்றாள் ஜானகி...

அவர், தான் சொன்னதைச் செய்து காட்டிய போதே-கண்ணீர் மல்க, கையெடுத்துக் கும்பிட்டாள்.

அப்பொழுதுதான் அவரைக் கேட்டாள்.

''நீங்க ரொம்பவும் நல்லவரா இருக்கீங்க... இந்த இடத்துக்கு ஏன் வர்றீங்க... பேசாம ஒரு பொண்ணை கல்யாணம் செஞ்சிட்டு ஒழுங்கா இருக்கலாம் இல்லையா?''



இதைக் கேட்டு, அவர் 'கடகட'வெனச் சிரித்தார்.

''ஏன் சிரிக்கறீங்க?''

''இல்லே... இங்கே தங்கியிருக்கறதாலே உங்களை எப்படி நான் தப்பா நினைக்கக் கூடாதோ-அதே மாதிரி தான்—நீங்களும் என்னை இங்கே வர்றதுனாலே வழி தவறியவன்னு நினைச்சிடக் கூடாது...''

''ஓ— ஸாரி...''

''பரவாயில்லே. எல்லோருக்கும் எப்பவுமே-எல்லாம் சரியான அர்த்தத்துலதான் புரியுங்கறதில்லே— சில சமயங்களிலே தப்பாவும் ஆயிடும். நான் மெட்ராஸ்லே இது மாதிரி ஊனமுற்ற குழந்தைகளை வச்சு ஒரு பள்ளிக்கூடம், ஆசிரமம் எல்லாம் நடத்தறேன்—டில்லி எனக்குப் பொறந்த ஊராப் போச்சு. அப்பப்ப இங்கே வந்து, எனக்குத் தெரிஞ்ச நல்ல நண்பர்களைப் பார்த்து, நன்கொடை, குழந்தைகளுக்கு ஆரக் கொடுக்கற உதவி-இதெல்லாம் வாங்கிட்டுப் போவேன்...''

ஜானகி, உடனே தனது சென்னை விலாசத்தை எடுத்துத் தந்தாள்.

''இது என் வீட்டு விலாசம். என் கணவரோட ஆபீஸ் அட்ரஸ், போன் நம்பர் எல்லாம் கொடுத்திருக்கேன்...தயவு செஞ்சு...''

''ஓ...ஷ்யூர்...''

அவர், அந்த விலாசத்தை வாங்கிக் கொண்டு தனது விசிட்டிங் கார்டு ஒன்றைக் கொடுத்தார்.

''இதுல என் மெட்ராஸ் போன் நம்பரும் இங்கே டில்லி வந்தால் தங்கற விலாசமும் இருக்கும்மா. நான் அடிக்கடி இந்த ஏரியாவுக்கு வருவேன்...ஆ...ஆ... தப்பா எடை போட்டுடாதீங்க...என் பெண்டாட்டியோடப் பொறந்த நாள்...என் குழந்தைங்களோடப் பொறந்தநாளெல்லாம்

வந்தா நிறைய இனிப்பு வாங்கிட்டு வருவேன். எத்தனையோ அனாதை ஆசிரமங்கள் இருக்கு...அங்கே போய் ஸ்வீட் கொடுக்காம, இந்த மாதிரிப் பட்ட இடத்துக்குப் போய் தான் விநியோகிக்கணுமான்னு என் ஃப்ரெண்ட்ஸ் என்னை கலாட்டா செய்வாங்க..."

"......"

"அநாதைங்கறது ஒரு ஊனமில்லே...கை கால் உடைஞ்சவங்ககூட ஊனத்தோட சேர்த்தியில்லே...அவங் களுக்கெல்லாம் உதவ நிறைய கில்டு சர்வீஸ் எல்லாம் இருக்கு...இப்பவே பாருங்க...எங்க பள்ளிக் கூடத்துல, ஊனமுற்ற சிறுவர்களுக்காக ஒரு ஹாஸ்டல் கட்டினோம்... அதுக்காக நிதி திரட்டனோம்னு சொன்னா, அவனவன் சொன்னா ஏதோ கையில் கிடைச்சதைக் கொடுக்கறான். இதுவே...இதோ இந்த மாதிரி வாழ்க்கையில் வழி தவறினப் பெண்களுக்காக நான் ஒரு இல்லம்கட்டப் போறேன்: நீங்க எல்லாரும் உதவணும்னு அவனவன், என்னடா அது இல்லம் சின்ன வீடுன்னு சொல்லிட்டுப் போயேன்னு சொல்லு வானுங்க. ஒவ்வொருத்தியும் திமிரெடுத்துப் போய் இந்தத் தொழிலுக்கு வந்திருக்கானுங்க...இவங்களுக்காக நீ எதுக் காக வக்காலத்து வாங்கறேயின்னு கேட்பானுங்க... சாதாரணமா என் காலைப் பார்த்து, 'ஐயோ பாவம்னு' சொல்றவன் கூட, இவங்களைப் பார்த்தா 'வர்றியா'ன்னு தான் கேட்பான்...இவங்க ஊனம் வெளியத் தெரியாதது, இதைப் பார்த்து யாருமே பச்சாதாபப் படப்போறதில்லே...

"......"

"ஆனா, நீங்க கூர்ந்து கவனிச்சீங்கன்னா தெரியும். இந்தப் பொண்ணுங்க உள்ளூர ஒரு நல்ல நட்புக்காக, ஒரு பாசமான சகோதரனுக்காக ஏங்கிட்டிருக்காங்க...வர்றவன் எல்லாம் இவங்களைப் பெண்டாள நினைக்கிறதுனாலேயே மனசளவுல 'ஆம்பிளைங்கன்னா அரக்கனுங்க'ன்னு நினைச்சு



வக்கரிச்சுப் போயிருக்காங்க. இவங்க கெட்ட படுக்கைய நினைவு படுத்தாத, உடம்புக்கு விலை பேசாத ஆம்பிளைங் களும் உண்டுங்கறதை ஞாபகப் படுத்தறதுக்காகத்தான் நான் அடிக்கடி வந்து போயிட்டு இருக்கேன்..."

இப்படிக்கூட ஒரு மனிதர்...

ஜானகிக்கு உண்மையிலேயே கையெடுத்துக் கும்பிட வேண்டும் போல இருக்கிறது.

"நீங்க நல்லாயிருக்கணும்..."

"இருக்கட்டும்மா. உங்க கணவரைத் தேடி தந்ததுக்கு அப்புறம் வாழ்த்துங்க போதும்..."

பரசுராம் இந்த வார்த்தைகளை மனப் பூர்வமாகத் தான் சொன்னார்.

அவர் சொன்னபடியே சென்னையில் ஜெகனின் பழைய வீட்டு விலாசத்தில் போய் தேடினார்.

"அவர் வீட்டைக் காலி செஞ்சிட்டுப் போயிட்டார். பார்க்கப் போனா...அந்த விபத்து நடந்தச் செய்தி கேட்டு கிளம்பினவர்தான் மறுபடி வரவே இல்லை...கிட்டத்தட்ட ஒரு வருஷம் போல வீட்டை பூட்டியே வச்சிருந்தார். அப் புறம் அவரோட சொந்தக்காரங்க வந்து காலி செஞ்சிட்டுப் போயிட்டாங்க..."

"இப்பத்தான் சார் நாலஞ்சு மாசம் முன்னாடி அவங்க அம்மா காலமானதாத் தகவல் வந்தது. யார் சொன்னாங் கன்னு கூட ஞாபகமில்லையே. யாரோ சொன்னாங்க— அவனுக்கு ஏற்கனவே கல்யாணமாயிடுத்தே சார்— இருங்க— இதுவும் நான் கேள்விப்பட்ட விஷயம்தான். எங்க ஆபீஸ்ஸை விட்டுட்டு அவன் திருவனந்தபுரம் போனான்... அப்புறம் என்ன ஆச்சுன்னு தெரியாது— நீங்க யாரு?"

அன்றும், துறுக்குமாய் அவர் தகவல்களைச் சேகரித்துக் கொண்டு வந்த போது, வழியிலேயே சோனா அவரை மடக்கிக் காரில் ஏற்றிக் கொண்டாள்.

''சோனா... நான் ஜானகி கிட்ட நிறைய பேசணும்...''

''நீங்க என்ன பேசப் போறீங்கன்னு எனக்குத் தெரியும்...''

''சோனா...''

''ஆமாம். ஜானகியோடப் புருஷன் இப்ப அந்த ஆபீஸ்லே வேலையில இல்லே. வேற வேலை— புதுசாக் கல்யாணம் செஞ்சிட்டு கொச்சின்லே இருக்கான். கூட ஒரு பொண் குழந்தை... ஐ திங்க்— குழந்தை போன துக்கத்தை மறக்கறதுக்காக, உங்களை மாதிரி அனாதைக் குழந்தைங்க பக்கம் அவன் கவனம் திரும்பி இருக்கும்... எது எப்படியோ— அவன் ஒரு விதமா தன் லைஃப்பை செட்டில் பண்ணிட்டான். இனிமே இவ போனா, அங்கே குழப்பம்தான் மிஞ்சும்.''

''அதுக்காக அவ கிட்டயிருந்து விஷயத்தை மறைக்க முடியுமா சோனா?''

''மறைக்கணும். மறைச்சே ஆகணும். பரசுராம் இங்கே பாருங்க— அவனுக்கு நான் என்ன குறை வச்சிருக்கேன்— எனக்குன்னு பிரியமா நான் எதையுமே வச்சிட்டதில்லே பரசுராம்— எனக்கு இவ வேணும்... இந்த அவல வாழ்க்கையோடக் கறையே படாத-புனிதமான ஜீவன்... அவளைப் பார்க்கறப்ப எல்லாம் நான் புதுசாப் பிறக்கறேன் பரசுராம். நான் இருக்கப் போறது கொஞ்ச நாள் தான்— அது வரைக்குமாவது அவ வேணும்...''.

காரில் அமர்ந்தபடி குலுங்கி அழுதாள் சோனா.

# 7

கண் இமைக்கவில்லை ஜெகன். ஜானகியையே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

அவளோ, தலை குனிந்து உட்கார்ந்திருக்கிறாள்... தேவிதான் அந்தச் சூழ்நிலையைக் கலகலப்பாக்குகிறாள்.

''பாபு... இங்கே வா... இந்தா சாக்லேட்...''

பாபு உடனே வரவில்லை— மெல்லிசாய் சிரித்தபடி பரசுராமின் கையைப் பிடித்துக் கொள்கிறான்—

''பாபு— பாபு... இங்கே வாயேன்— ப்ளீஸ்—''

ஜெகன் அழைத்தவுடன் அவளருகில் போய் நிற்கிறான் பாபு.

''நமஸ்தே சாப்!''

''இது என்னது— பம்பாய் பழக்கமா—''

''நான் உங்க ஷூவை...''

அவன் அதற்கு மேல் பேசாதபடி, அவனது வாயைப் பொத்தி, வாசலுக்கு அழைத்துச் செல்கிறார் பரசுராம்— சத்தடி சாக்கில் தேவியும், அவர்களிருவரையும் விட்டு நகர வேண்டும் என்றுதான் பார்க்கிறாள்.

அவளது எண்ணத்தைப் புரிந்து கொண்டாற்போல ஜானகி குரல் கொடுக்கிறாள்.

''நீயும் இரும்மா—நான் அவர் கிட்ட தனியா எதுவும் பேசப் போறதில்லை...இனிமே-எங்க ரெண்டு பேருக்குள்ள அந்தரங்கம்கறது எதுவும் கிடையாது. நாம் மூணு பேருமே உட்கார்ந்து பேச வேண்டியது இது...''

இந்த வார்த்தையே தேவிக்கும், ஜெகனுக்கும் வயிற்றில் பாலை வார்த்தாற்போல இருக்கிறது...

தேவி சோபாவின் முனையில் உட்கார்ந்தாள்.

''எங்கேயிருந்தாவது ஒரு தகவல் கொடுத்திருக்கூடாதா ஜானகி...''

ஜெகன் கேட்க, ஜானகி சோபமாய் புன்னகைக்கிறாள்.

''தகவல் கொடுக்க நீங்க எங்கே அதே ஆபீஸ்லேயா இருந்தீங்க...வீட்டையும் காலி செஞ்சிட்டு...''

''இத்தனை நாளும் நீ எங்கே இருந்தே ஜானகி...இந்த பரசுராம் யாரு...''

ஜானகி நிமிர்ந்து தன் கணவனையும், தேவியையும் பார்க்கிறாள்.

இதோ அவள் எதிர்பார்த்திருந்த தருணம் வந்து விட்டது.

ஒரு ஆண் எத்தனை வருடம் எங்கே சுற்றிக் கொண்டிருந்தாலும் அது ஒரு பிரச்சனைக்குரிய விஷயமாகப் போவதில்லை. இதுவே பெண்ணென்றால்...

'நீ இல்லாததால் நான் தேவியை மணந்தேன்' என்று ஜெகன் சொல்லலாம்.

இதுவே, பாபுவை வளர்க்க ஒரு நல்ல ஆண் துணை தேவைப்பட்டது என்று ஜானகி சொல்ல முடியாது.

இவன் தம்மை ஏற்றுக் கொள்ளப் போகிறானோ இல்லையோ...அது வேறு விஷயம். ஆனாலும் நான்



இன்றும் தூய்மையானவளாகத்தான் இருக்கிறேன்...என்பதற்கு ஒரு ஐ.எஸ்.ஐ முத்திரை வேண்டியிருக்கிறது...

ஜானகி மெல்லியக் குரலில் தனக்கு நிகழ்ந்தது அனைத்தையும் சொல்கிறாள்.

''சோனா செஞ்ச ஒரே தப்பு—நான் உயிரோட இருக்கற விஷயத்தை உங்க கிட்ட எல்லாம் சொல்லாததுதான். மத்தபடி அவ என்னை ரொம்பவும் கௌரவமா நடத்தினா.''

''மிச்ச காலத்துக்கு கூட அவ சொல்லாமலேயே இருந்திருப்பா...அவனுக்கு உள்ளுக்குள்ளேயே குணமாக்கவே முடியாதபடி நுரையீரல் நோய்...நாளாக ஆக அதிகமாயிடுச்சு. இனிமே எப்ப வேணுமானாலும் உன் கதை முடியலாம்னு டாக்டர் சொன்னதுக்கு அப்புறம்தான் என்னை மெட்ராசுக்கு பரசுராம் கூட அனுப்பியிருக்கா...அதுவும், எனக்கும், குழந்தைக்கும் ஆயுசுக்கும் உட்கார்ந்து சாப்பிடற மாதிரி பணமும் என் மேலே போட்டு...''

''என்னை அனுப்பறப்ப கதறி அழுதுட்டா அவ—''

''ஆனா, உங்களுக்கு இன்னொரு கல்யாணமான விவரத்தை மட்டும் என் கிட்ட சொல்லவே இல்லே அவ. சொல்லியிருந்தா, நான் புறப்பட்டு வந்தே இருக்க மாட்டேன்...''

இதைச் சொல்லும் போது மட்டும் ஜானகியின் குரல் உடைகிறது—

ஜெகன் அதிர்ந்து போய் உட்கார்ந்து விட்டான்.

''என்ன உட்கார்ந்துட்டீங்க? அக்காவையும் குழந்தையையும் அழைச்சிட்டுக் கிளம்புங்க—''.

தேவிதான் குரல் கொடுக்கிறாள்.

''இல்லே— நான்... இது பத்தி நிறைய யோசிக்க வேண்டியிருக்கு தேவி—''

ஜானகியை மேற்கொண்டு பேசவே விடவில்லை அவன். கணவனைப் பார்த்து முறைக்கிறாள்.

''இப்படி அடிச்சு வச்ச அய்யனார் சிலை மாதிரி உட்கார்ந்துட்டா எப்படி?''

இதைச் சொல்லி விட்டு, உடனேயே நாக்கை கடித்துக் கொள்கிறாள்.

''ஸாரிக்கா, உங்க முன்னாலே நான் அவரை...''

ஜானகி புன்னகைக்கிறாள்.

ஜெகனும் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல ஜானகியைப் பார்த்துச் சிரிக்கிறான்.

''ஜானகி... நீ இத்தனை நாள் எங்கே இருந்துட்டு வந்தாலும் அதே பழைய ஜானகிதான். நான் என் மனசார உன்னை ஏத்துக்கறேன்... ஆனா—''.

''சொல்லுங்க... நிருபமா—பாபு விஷயம் தானே...''

''ஆமா— இதைத்தான் நான் எப்படிச் சமாளிக்கப் போறேன்னு தெரியல்லே...''

ஜெகன், நெற்றிப் பொட்டைத் தேய்த்து விட்டுக் கொள்கிறான்.

ஜானகி நிதானமாய் சொல்கிறாள்...

எப்படியும் பாபுவைப் பரசுராம் சாரோட பள்ளிக் கூடத்துல சேர்க்கலாம்னு இருக்கேன். நானுமே அதே ஸ்கூல்லே ஏதாவது ஒரு வேலையிலே—''

''இப்ப எதுக்கு அதைப் பத்தி எல்லாம்—பள்ளிக்கூடம் திறக்க இன்னும் ஒன்றரை மாசமிருக்கு. நீங்க வாங்க அக்கா...அப்புறம் போகப் போகப் பார்த்துப்போம்...''



தேவி, அவனைத் தன்னுடன் அழைத்துப் போவதில் தீர்மானமாக இருந்தாள்.

வாய் திறந்து சொல்லாவிட்டாலும், தன் கணவனது விருப்பமும் அதுவேதான் என்பதை அவள் புரிந்து கொண்டிருந்தாள்.

என்ன காரணத்தினாலோ, அவன் தயங்குகிறான்—

அதற்காக, உடைமைக்காரியை வெளியில் விரட்டுவது நியாயமே இல்லை—

கிளம்பும்போது-பாபு, பரசுராமைப் பார்த்துக் கண் சிமிட்டுகிறான்.

''ஏய்—இப்படி கண் சிமிட்டாதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்—''

ஜானகி ரகசிமாய் மகனை அதட்ட அவனோ-அப்பொழுதுதான் பூத்த மல்லிகைக் கொத்து போலச் சிரிக்கிறான்.

''இது...நம்ம கிரிஜாக்கா சொல்லித் தந்ததும்மா...''

அவன், பரசுராமிடம் குறும்பாய் கேட்கிறான்:

''அங்கிள், எல்லாருக்கும் விசிட்டிங் கார்டை எடுத்து எடுத்து நீட்டுவீங்களே—இந்தப் புது அங்கிளுக்கு ஏன் இன்னும் தரல்லே? தீர்ந்து போயிடுச்சா—''

''ஓ—மறந்துட்டேன்...''

பரசுராம், தனது கார்டை எடுத்து ஜெகனிடம் கொடுத்து விட்டுச் சொல்கிறார்:

''மிஸ்டர் ஜெகன்னாதன்....எப்ப என் ஹெல்ப் வேணு மானாலும் சொல்லுங்க. பாபுவுக்கு ஸ்கூல் திறக்கறதுக்கு முன்னாலே, நானே வந்து அழைச்சிட்டுப் போறேன்.''

காரில் வழக்கம் போல, ஜெகன்னின் பக்கத்தில் அமரப்போன தேவி, 'சட்'டென பின் சீட்டுக்கு வருகிறாள்.

''பாபு- இங்கே வாயேன்—''

ஜெகன்தான் மகனை ஆசையாய் கூப்பிட்டு அருகில் வைத்துக் கொள்கிறான். கன்னத்தையும், காதையும் தடவித் தடவிப் பார்க்கிறான்.

ஜானகி, இது ஒன்றையுமே கவனியாதது போல கார் ஜன்னல் வழியே வேடிக்கைப் பார்க்கிறாள்— இருந்தும் கண்களில் முன்னாய் கண்ணீர் உறுத்தாமல் இல்லை—

''திருவை அழைச்சிட்டுத் தானே போகணும்?''.

யதார்த்தமாய் கேட்டவன், உடனே நாக்கை கடித்துக் கொள்கிறான்.

ஜானகியைக் காரில் உட்கார வைத்துக் கொண்டெப்படி அவன் தனது அக்காவைச் சந்திக்கப் போக முடியும்?

அவனைப் பார்த்தவுடனேயே ஜெகனின் அக்கா, அதிர்ந்து போய் விடமாட்டாளா?

உண்மை வெளிப்பட அவள் ஒருத்தி போதாதா?

அவனது குழப்பத்தைப் புரிந்து கொண்டாற் போல, தேவி 'சட்'டென பதிலளிக்கிறாள்.

''எங்களைக் கொண்டு போய் முதல்லே நம்ம வீட்டுலே விட்டுட்டு அப்புறம் போய் திருவை அழைச்சிட்டு வாங்க. அவ, தன்கூட ஒரு பட்டாளத்தையே கிளப்பிட்டு வருவா— இப்ப வேண்டாம். அம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்லி வையுங்க—''

''உனக்கு உடம்பு சரியில்லையின்னா - உடனே என்னமோ ஏதோன்னு அக்கா பதறியடிச்சிட்டு என் கூடவே புறப்பட்டுடுவாளே தேவி...''



''ஓ...அது வேற இருக்கோ. சரி—நீங்க இவங்களை அழைச்சிட்டு வீட்டுக்குப் போங்க. நான் போய் திருப மாவை அழைச்சிட்டு வர்றேன்...''

அவள் காரை நிறுத்தி, வழியிலேயே இறங்கிக்கொள் கிறாள். குனிந்து, ஜானகியின் முதுகைத் தொட்டு கனிவுடன் சொல்கிறாள்.

''அக்கா...அது உங்க வீடு, சமையல் எல்லாமே ரெடியா டேபிள் மேல இருக்கு. மூணு பேருமா எடுத்துப் போட்டுட்டு சாப்பிடுங்க...

ஜானகி பிரமித்து உட்கார்ந்திருக்கும் போதே தேவி, தெருவோடு போன ஆட்டோ ரிக்ஷாவை கைதட்டி நிறுத்தி- அதில் ஏறிக் கொள்கிறாள்.

வீடு வந்து சேரும் வரையில் பாபுதான் ஜெகனுடன்'' பேசிக் கொண்டே வந்தான்.

''இப்ப போறாங்களே... அந்த ஆண்ட்டி பேரு என்ன?'

''தேவி''

''தேவி...பேரு ரொம்ப நல்லாயிருக்கு அங்கிள், இவங் களுக்கு நீங்க என்ன ரேட் கொடுக்கறீங்க...''

''ரேட்?''

ஜெகன், பதைத்துப்போய் சிறுவனைப் பார்க்க ஜானகியோ, பின் 'ட்டிலிருந்தபடியே மகனின் தலை முடியைப்பிடித்து உலுக்க...

''பாபு''

''சும்மாயிரு ஜானகி, அவனை எதுக்கு அதட்டறே?''

''அதானே... எங்க அம்மா எப்பவுமே என்னைத் திட்டிட் டேதான் இருப்பா அங்கிள், யுவராஜ்கூட சொல்லுவான்... உங்கம்மா மட்டும் இல்லையின்னா—உன்னை இந்த ஏரியா

வுக்கே 'கிஸ்' ஆக்கிடுவேன் பாபுன்னு...அந்த ஆன்ட்டியோட ரேட் கேட்டா, எங்கம்மாவுக்கு ஏன் இவ்வளவு கோபம் வர்றது!

ஜெகன் சிரிக்கிறான்...

"பாபு... பம்பாய்லே அப்படி இருக்குமாயிருக்கும் அங்கேயே இருந்த உங்கம்மாவுக்கு யாராவது விலை பேசினாங்களா..."

"சேச்சே... எங்கம்மா சோனாஜியோட பஹன்ஜி அங்கிள்... அவங்களுக்கெல்லாம் யாரும் விலை போட மாட்டாங்க".

"அது மாதிரிதான் தேவி ஆன்ட்டியும். தேவி உங்கம்மாவோட சிஸ்டர் மாதிரி... இங்கே எங்களுக்குன்னு வீடு, வாசல், எல்லாம் இருக்கு..."

"அதான் நேத்து வந்திருந்தேனே... அங்கே இருந்த ஒரு பொண்ணு... உங்க பொண்ணா அங்கிள்?"

"ஆமாப்பா..."

"நல்லா இருக்கா. எனக்கு அந்த குட்டி அக்காவை ரொம்பப் பிடிச்சிருந்தது அங்கிள். ஆனா, பேசுவாளோ, மாட்டாளோன்னுதான் பயமா இருந்தது...".

ஜெகனின் கண்கள் கலங்கி விட்டது.

குழந்தையின் மனசுக்குள் எத்தனையெத்தனை கவலைகள்...

அவன், பாபுவின் கன்னத்தில் செல்லமாய் தட்டுகிறான்.

"அந்த அக்கா ரொம்பவும் நல்லவ பாபு... ஆனாலும் கொஞ்சம் பிடிவாதக்காரி..."

"எங்க அம்மாவை மாதிரியின்னு சொல்லுங்க..."



பாபு சிரித்துக் கொண்டே சொல்கிறான.

"எங்க அம்மா கூட ரொம்ப ரொம்ப நல்லவங்க. ஆனா, சோனா கிட்ட சில சமயம் பிடிவாதம் பிடிப்பாங்க பாருங்க... எனக்கே கோபம் கோபமா வரும்... நினைச்சா இந்த நிமிஷமே என் புருஷன் கிட்ட கொண்டு விடுன்னு அழ ஆரம்பிச்சிடுவாங்க எங்க அம்மா. சோனாவும் என்ன வெல்லாமோ சொல்லிப் பார்ப்பாங்க... கெஞ்சுவாங்க. ஊம் ஊம்... மசிய மாட்டாங்களே..."

ஜெகன், சிறுவனை வாரியணைத்து உச்சி முகர்ந்தான்.

'சத்தியமாய் இந்தக் குழந்தையை இனிமேல என்னால் பிரிந்திருக்க முடியாது—'

'இவன் என்னிலிருந்துப் பிறந்தவன். இவனை நல்ல முறையில் வளர்க்க வேண்டியது என் கடமை...'

அவனுள் உணர்ச்சி அலையலையாய் பொங்க அவன் ஜானகியைப் பார்க்கிறான்.

அவளோ-எங்கோ வெறித்தபடி...

வீட்டுக்கு வந்துமே கூட, ஜானகி ஒட்டாமல் தான் நிற்கிறாள்...

ஜெகன்தான் மூவருக்கும் தட்டு எடுத்து டைனிங் டேபிளில் வைத்துவிட்டு அவளைச் சாப்பிட அழைக்கிறான்

"வா ஜானகி..."

"இல்லே. நீங்க ரெண்டு பேரும் சாப்பிடுங்க: நான் தேவி வந்தவுடன் சாப்பிடுகிறேன்..."

அவள் பரிமாற...எட்டு வருடங்களுக்குப் பிறகு...அவன் கண்ணீர் வழிவதைக்கூட துடைத்துக் கொள்ள மறந்தவனாய் சாப்பிட—

பாபுவை டைனிங் டேபிளில் பிடித்து உட்கார வைப்பதே கஷ்டமாக இருக்கிறது அவர்களுக்கு...

''எனக்கு இதெல்லாம் சரிப்பட்டு வராது. ஒரு தட்லே போட்டு கொடுத்திடு...நான் தரையில உட்கார்ந்து சாப்பிடறேன்...டேபிள் நாற்காலி எல்லாம் பெரிய மனுஷங்க சமாச்சாரம். எனக்கு இதுதான் ஃப்ரீயா இருக்கு...''

''அதெல்லாம் பம்பாய்லே சரியா இருக்குமாயிருக்கும் கண்ணா. இங்கே ஒத்து வராது...இதோ இப்ப நிரு அக்கா வந்திருவாளே...அவ வந்து, தரையிலே உட்கார்ந்து சாப்பிடறதைப் பார்த்தா விழுந்து விழுந்துச் சிரிப்பா...''

''ஓ''...

அவன், டைனிங் டேபிளில் அமர்ந்து கொள்கிறான். விழிகள், நிருவுக்காகக் காத்து......அவள் புயலாய் வரப் போவது தெரியாமல்...

# 8

புயல் தான். தேவி வரும்போதே நிருபமாவைக் கொஞ்சி, ஐஸ்க்ரீம் பார்லருக்கு அழைத்துப் போய் சிரிக்கச் சிரிக்கப் பேசி, மெதுவாகத்தான் விஷயத்தைச் சொன்னாள்.

ஆனாலும் நிருபமாவின் முகம் சுண்டி விட்டது.

''அந்தப் பையனா—''

''ஆமாம்மா...அந்த ஆண்டியும், அந்தப் பையனும் கொஞ்ச நாள் இங்கே தங்கப் போறாங்க. அவனை இங்கே ஒரு ஸ்கூல்லே சேர்க்கற வரைக்கும்...''



''ஏன், அவங்களுக்கு இங்கே வேற யாரும் சொந்தக் காரங்க இல்லையா?''

''இல்லேம்மா...''

''சொந்தக்காரங்க இல்லாத ஊர்லே கொண்டு வந்து ஏன் சேர்க்கணும்?''

சிறுமியை அத்தனை எளிதில் ஏமாற்ற முடியாது... அவளது ஆயிரம் கேள்விகளுக்கும் யோசிக்காமல்-உடனுக்குடன் பதில் சொல்லியாக வேண்டும். கொஞ்சம் நிதானித்தால்கூட, 'என்ன சொல்லி என்னை டபாய்க்கலாம்னு பார்க்கறியா'' இப்படி அவளே கேட்டு விடுவாள். தேவி, அவள் மனசுக்குள் பாபுவின் மீது இரக்கம் பிறப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கிறதா என்று தேட....

அவளோ, எத்தனைதான் சொன்னாலும் ஒரு விஷயத்தில் மகா பிடிவாதக்காரியாய் இருக்கிறாள்.

''அவன் ஹாண்டிகேப்பா இருந்தா...அதுக்காக அப்பாவுக்கு ஏன் அத்தனை கோபம் வர்றது...என்னை அடிக்கிற அளவுக்குப் போய்...

நிரு மூக்கை உறிஞ்சுகிறாள்.

''தப்புதான்... அப்பாவே அதை ரொம்ப ஃபீல் பண்ணினார். பாவம்—குழந்தைய அடிச்சிட்டேனேயின்னு என் கிட்ட வருத்தப்பட்டுட்டே வந்தார்....''

''நிஜமாவா?''

குழந்தை ஓரளவுக்கு திருப்தியோடு கேட்கிறாள். அவள் முகத்தில் மெல்லிய சிரிப்பு பரவுகிறது.

ஆனால் வீட்டுக்கு வந்தால்...

ஜெகன், சோபாவிலியே காலை மடக்கியபடி தூங்கிக் கொண்டிருந்த பாபுவைத் தூக்கி, படுக்கையறையில் தனது படுக்கையில் கிடத்த -

திரு 'வெடுக்' கெனத் திரும்பி, தேவியிடம் ஓடி வருகிறான்.

ஜெகன் பாபுவைத் தூக்கியதே முதலில் அவனுக்குப் பிடிக்கவில்லை. அது எப்படி தூக்கலாம்....

சாதாரணமாய் அவன்தான் இப்படி சோபாவிலேயே பூனைக் குட்டி போல முடங்கியிருப்பான். தூக்கம் கண்களை ஒரு பக்கம் இழுத்தாலும், எழுந்து போய் படுக்கையில் படுக்க மனசு இடம் தராது. கூடவே, அப்பா தன்னைத் தூக்கவேண்டும் என்கிற சிறுபிள்ளைக்கே உரிய எதிர்பார்ப்பு அவன் அருகில் வரும் போது, தூங்குவது போல ஒரு பாவனை...

இப்பொழுது அத்தனையும் சேர்ந்து, குழந்தையின் மனசுக்குள் சொல்லத் தெரியாத ஆத்திரமாய்...

''அவனை ஏன் நம்ம கட்டில்லே படுக்க வச்சிக்காரு அப்பா....''

''சோபாவிலேயே தூங்கிட்டான் இல்லே நிரும்மா. சின்ன பையன்தானே இதோ இன்னும் கொஞ்சம் நேரத்துல முழிச்சுக்கப் போறான்...''

தேவியின் எந்த சமாதானத்தையும் அவள் காது கொடுத்து கேட்பதாயில்லை...மெல்ல விசும்ப ஆரம்பித்து விம்மியழ ஆரம்பித்து விட்டாள்.

ஜானகி தன் மகனையே ஒரு கணம் ஆழ்ந்து பார்த்த படி நிற்கிறாள்...

ஜெகனோ, ஜானகியின் இந்தப் பார்வையைத் தாங்க மாட்டாதவனாய் - தேவியிடம் போய் எரிந்து விழுகிறான்.

''என்ன தேவி இது? அவதான் அப்படி முரட்டுப் பிடிவாதமா இருக்கான்னா... நீயும் அவ கூட சேர்ந்து அவளுக்கு சமாதானம் சொல்லிட்டிருக்கியே...காதுல வாங்கிக்காம விடு...கழுதை. தானா சரிபட்டு வரும்...''



தேவி இரண்டு பக்கமும் பேச முடியாதபடி கையைப் பிசைகிறாள்.

ஜானகிதான் தேவிக்கு சமயத்தில் கை கொடுக்கிறாள்.

''தேவி... வீடுதான் பெரிசா இருக்கே.... குழந்தைய வேற 'ரூம்லே கொண்டு போய் படுக்க வச்சுக்கறேனே... என்ன இருந்தாலும் அது நிருபமாவோட இடமில்லையா... ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னாலே, நான் கூட அவனைப் போலத்தான் இருந்தேன். ஒரு தடவை, என்னோடத் தலைகாணிய எடுத்து என் மாமியார் வச்சுட்டதுக்கே என்னமோ கொள்ளை போயிட்ட மாதிரி அழுதிருக்கேன்...'

அவள் பாபுவைத் தூக்கிக் கொண்டு போய் வேறு அறையில் படுக்க வைக்கிறாள்.

நிருபமா, யாருடனும் அதிகம் பேசாமல் எதையோ கொறித்து விட்டு, ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு தனியே போய் உட்காருகிறாள்.

ஜானகி, தேவியிடம் நிதானமாய் சொல்லுகிறாள்:

''அவர் கிட்ட சொல்லு தேவி. பாபுவுக்கு இந்த மாதிரி அப்பா பாசமெல்லாம் கிடையாது...அதனால அவன் ஒண்ணும் பெரிசா பாதிக்கபப்பட மாட்டான்...ஆனா, நிருபமா அப்படியில்லே...இந்த வீட்டுல ராணி மாதிரி வளர்ந்துட்டா...புதுசா ஒரு துணையக் கொண்டு வந்து விட்டா-அது ஏத்துக்கறது கஷ்டம்...''

''பார்க்கலாம் அக்கா...''

இதைச் சொல்லும்போது தேவியே கலங்கிப் போய் இருந்தாள்.

பாபு, தூங்கி எழுந்த பின்பும் அவனேதான் வலியச் சென்று நிருபமாவிடம் பேசுகிறான்...

அவனுக்கு தான் போய் முதலில் பேசுகிறோம் என்கிற பந்தா எல்லாம் தெரியவில்லை.

தேவி காபி கலந்து கொண்டிருக்க-அவன் பக்கத்தில் வந்து நின்று சிரிக்கிறான்.

''தான் உங்களுக்கு ஹெல்ப் பண்ணட்டுமா ஆன்ட்டீ...''

''உனக்கு எதுக்கு இந்த வேலையெல்லாம்?''

''ஏன் ஆன்ட்டீ...செஞ்சா என்ன! பாம்பேயிலே யுவராஜ்ஜும், நானுமாத்தான் எல்லாருக்கும் டீ சப்ளை பண்ணுவோம். யுவராஜ் பாட்டு பாடிட்டே எல்லாருக்கும் டீ எடுத்துத் தருவான். அது என்ன பாட்டு தெரியுமா...இந்தியில சொன்னாப் புரியாதில்லை...தமிழ்லே இதே பாட்டை ஆறுமுகம்னு ஒரு பையன் இருக்கான் அங்கே-அவன் பாடுவான்.

சொன்னதுடன் நிற்காமல் இரண்டு கைகளிலும் காபி கோப்பையை ஏந்திக் கொண்டு, பெண்பிள்ளை போல நெளிந்து, வளைந்து பாடுகிறான் அவன்.

''கண்ணைச் சுழட்டி காளையரை இழுக்கற
கமலாவுக்கு இந்த டீ...

கருத்த மேனியிலும் காந்தத்தை வச்சிருக்கும்
கவிதாவுக்கு இந்த டீ...

ரோசாப்பூ சேலை கட்டி ரொம்பத்தான் அலட்டுற
ரோகிணிக்கு இந்த டீ...

ரோட்டோர மானாலும் ரொமான்சு படிக்கிற
ரோஸ் மேரிக்கு இந்த டீ....

சின்ன இடுப்புடனே 'சிக்'குனு இருக்கற
சிவகாமிக்கு இந்த டீ...



சிட்டு போலத் திரிஞ்சாலும் துட்டுமேலக் கண்ணிருக்கும்
சித்திராவுக்கு இந்த டீ....''

தேவியினால் சிரிப்பை அடக்க முடியவில்லை...கண்களில் நீர் தளும்பச் சிரிக்கிறாள். ஜானகிக்கு மகன் மீது கோபம் வந்தாலும், அவன் பாடுவதும், ஆடுவதும், முகத்தைப் பாட்டுக்கு ஏற்றபடி நொடிப்பதும் புன்னகையை வரவழைக்கிறது...ஜெகன், சற்று தள்ளி அமர்ந்து இவனை வேடிக்கைப் பார்க்கிறான்.

அவன், தன் தாயிடமும், ஜெகனிடமும் ஆளுக்கொரு கோப்பையை நீட்டி விட்டு, ஒரு கோப்பையை-தன் அறையிலிருந்தபடியே அவனை விறைத்துப் பார்க்கும் நிருபமாவுக்கு எடுத்துப் போகிறான். இப்பொழுது அவனுள் இயல்பாகவே உள்ள குறும்புத்தனம் அவளதுப் பெயரையும் சேர்த்து பாட வைக்கிறது.

''நீட்டாக உடுத்தியும் ஸ்வீட்டாகப் பேசாத
நிருபமாக்கு இந்த டீ....''

அவன் கோப்பையைக் கொண்டு நீட்ட, யாருமே எதிர்பாராத விதமாய் நிருபமா, கோப்பையை அவன் மீதே விசிறியடித்துவிட்டு, வேறு ஒரு அறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொள்கிறாள்.

ஜெகனுக்கு முகம் சிவந்து போய்விட்டது. பாய்ந்து வந்து, கதவை உடைப்பது போல இடிக்கிறான்.

''ஏய், கதவைத் திற!''

''மாட்டேன். அம்மா ஏன் அவன் கிட்ட எனக்கு டீ கொடுத்து அனுப்பினா....''

''அதுக்காக அவன் மேல, கொதிக்கற டீயைக் கொட்டறதா—திஸ் இஸ் டு மச் ஐ ஸே....கதவைத் திறக்கப் போறியா இல்லையா....''

தேவி, ஓடி வந்து அவனைப் பிடித்து ஒரு புறம் தள்ளி விட்டு குரல் கொடுக்கிறாள்...

"நிரு அப்பாவோடக் கோபத்தை அதிகமாக்காதே கண்ணா... வெளியே வா..."

"முடியாது. அவன் இருக்கற வரைக்கும், அப்பா அப்படித்தான் என்னை சும்மாச் சும்மாக் கோவிச்சிட்டே இருப்பார். அந்தப் பையன் என்னைப் பார்த்து அப்படி பாடலாமா. அவனை மன்னிப்பு கேட்க சொல்லு..."

இதற்குள் பாபு, தன் மீது வழிந்த தேநீரைத் துடைத்து கொண்டு வர—ஜானகி, தன் மகனைப் பார்த்து அதட்டு கிறாள்.

"பாபு... உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக் கேன். அதிகப்ரசங்கித்தனமா நடந்துக்காதேயின்னு. போய் நிருகிட்ட ஸாரி சொல்லு..."

சிறுவனின் முகம் அவமானத்தில் கறுத்துப் போய் விட்டது. கண்களில் 'கருகரு' வென நீர் திரள்கிறது...

"இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு..."

"பேசாதே... போய் மன்னிப்பு கேளு...உம்..."

பாபு, அறைக் கதவின் அருகில் போய் நிற்கிறான், கைகள் ஒரு நிலையில் இல்லாமல், சட்டைப் பொத்தானைத் திருக...அழுகையில் மூக்கு விடைக்கிறது...

"ஸாரி—நிரு அக்கா..."

அவன் இதைச் சொல்லி விட்டு வேகமாய் நடந்து, வாசல் போர்டிகோவில் போட்டிருந்த பிரம்பு நாற்காலியில் போய் விழுந்தான்.

கதவைத் திறந்த நிருபமா-அங்கிருந்த ஜானகி யையோ, ஜெகனையோ லட்சியமே செய்யாமல் தேவியைப் பார்த்து கேட்டாள்.



"எங்கே என் ம..."

ஏதோ சொல்லப் போன ஜெகனை, ஜானகி தன் பார்வையினாலேயே தடுக்கிறாள்.

அன்றிரவே அவன் தேவியிடம் சொல்லி விட்டான்.

"இது ஒத்துப் போகும்னு எனக்குத் தோணலை தேவி. அநாவசியமா குழந்தைங்க சண்டையினாலே நமக்கும் மனசு வேதனை தாங்கலே-ஒரே வயித்துல பொறந்த குழந்தைங்க இப்படி எதிரும் புதிருமா வியூகம் கட்டிட்டு நிற்கறதைப் பார்க்கறச்சே-வயித்தை சங்கடம் செய்யுது...'

நிஜம்தான். இரவு எல்லோரும் படுக்கப் போகும் வரையில் பாபு உள்ளே வரவேயில்லை...தேவியும், ஜெகனும் எத்தனையோ முறை கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் பிரயோசனமில்லை.

"வேணாம் ஆன்ட்டி. நான் இங்கேயே படுத்துக் கறேன்..."

ஜானகியிடம் மட்டும், கண்ணீர் வழியத் தேம்பு கிறான்"...

"அம்மா...உனக்கு இஷ்டம்னா நீ இங்கே இரு... நான் பரசுராம் அங்கிள் கிட்ட போயிடறேன்...என்னை அங்கே கொண்டு வந்து விட்டுடு..."

ஜெகன், சிறுவனின் அருகில் தரையில் வந்தமர்ந் தான்.

"பாபு-நீ நல்ல பையன்தானே..."

"...."

"உன்னை மாதிரி எல்லா விஷயத்யையும் ஈஸியா எடுத்துக்கற டைப் இல்லே கண்ணா நிரு...அவளுக்கு 'சுருக்'குன்னா கோபம் வந்துடும்...அவ, உன் மேல

டிவைக் கொட்டின தோட நித்காம, உன்னை 'ஸாரி' கேட்க வச்சது ரொம்ப ரொம்பத் தப்பு...தயவு செஞ்சு சாப்பிடவா... நான் மன்னிப்பு கேட்டுக்கறேன்...''

''நீங்க யாரு அங்கிள்...மன்னிப்பு கேட்டுக்க... வேண்டாம்... நான் இப்படி வாசல் ஹாலிலேயே உட்கார்ந்துக்கறேன்...எனக்கு ஒரு தட்டுல சாப்பாடு கொடுங்க...சாப்பிட்டுட்டு சோபாவுலேயே படுத்துக் கறேன்...''

அதற்கு மேல் அவனை வற்புறுத்தவே முடியவில்லை.

நிருபமாவோ - தன்னைச் சுற்றி எதுவுமே நடக்காதது போல, கையில் ஒரு புத்தகத்தை எடுத்துச் கொண்டு சாப்பிட வந்து டேபிள் முன் அமர்ந்தாள்.

''அம்மா, எனக்கு சாப்பாடு போடு...''

''நிரு...நம்ம வீட்டுக்கு கெஸ்ட்டா வந்திருக்கிறவங்க கிட்டப் போய் முகத்தை தூக்கி வச்சிட்டு...கத்தி. அமர்களம் செஞ்சு...கொஞ்சம் கூட நல்லாவே இல்லேம்மா— நீ போய் அந்தப் பையனையும், ஆன்ட்டி யையும் சாப்பிட கூப்பிடு...''

''கெஸ்ட்டா வந்தா - அதுக்கேத்த மாதிரி டிஸிப் ளினோட நடந்துக்கணும். அந்தப் பையன் என்னை கேலி செஞ்சு பாடறான்......நீங்க மூணு பேரும் அதை ரசிச்சிப் பூரிக்கிறீங்க. என்னால இதை ஒத்துக்கவே முடியாது. உனக்கு ஃபிரண்டானா, நீ அவங்களை சாப்பிடக் கூப்பிடு... அப்பாவுக்கு அந்தப் பையனைப் பிடிச்சிருந்ததுன்னா, சாதத்தை பிசைஞ்சு அவன் வாயிலே வேணுமானாலும் ஊட்டட்டும். ஐ டோன்ட் கேர்...''

அவள் பட படவென எரிந்து விழுந்து விட்டு சாப்பிட்டுப் போக...



ஜானகி, பாபுவை சிரிக்க வைத்து, சாப்பிட வைக்க படாத பாடு பட...

ஜெகன் ஒரு ஜெக் தண்ணீரை எடுத்து மடமடவெனக் குடிக்கிறான்.

அப்பா...போதுமடா சாமி...

இரவு, நிருபமா அவன் பக்கம் சுத்தமாய் திரும்பவே இல்லை...தேவியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு தூங்கு கிறாள்.

ஜானகியோ பாபுவுடன் சோபாவில்...

பொழுது எப்பொழுது விடியும் என்கிற எதிர்பார்ப் போடு...

நள்ளிரவில்-ஜெகன், ஜானகியைத் தேடி வந்து அவளது தலையை வருடுகிறான்.

''ஜானகி...ஜானகி...நாம் யாருக்கு என்ன பாவம் செஞ் சோம் ஜானகி ''

அவள் அவனிடம் மெல்லிய குரலில் சொல்கிறாள்...

''தயவு செஞ்சு எதுவானாலும் காலையிலே பேசிக்க லாம். இப்ப போயிடுங்க...இது வேற, அவ கண்ணுலப்பட் பெரிய ஷாக்காயிடப் போறது...''

அவன் மீண்டும் படுக்கையறைக்குள் நுழைந்தபோ திடுக்கிட்டான்,

தேவி, கட்டிலில் முழங்கால்களைக் கட்டிக் கொண் உட்கார்ந்திருந்தாள்—

''என் இப்படி பயந்து நடுங்கறீங்க...உங்க பெண்டாட்டிதானே அவங்களும்? போய் பேசிட்டு வந்தீங்க... அதுல என்ன தப்பிருக்கு...நான் முழிச்சிட்டு உட்கார்ந்திருக்கறது இதோ, இவனுக்காக—எழுந்து பார்த்து நீங்க பக்கத்துல இல்லையின்னா...நேரே அங்கேதான் வந்து நிற்பா...''

ஜெகன், தேவியின் மடியில் தலை புதைத்து ஒரு குழந்தையைப் போல அழுகிறான்.

''நான் என்ன செய்வேன் தேவி...எனக்கு பாபுவையும் ஜானகியையும் பார்த்தாப் பரிதாபமா இருக்கு...''

தேவி, நீண்டதொரு பெருமூச்சுடன், கணவனின் கிராப்பை விரலால் கோதி விடுகிறாள்.

''விடியட்டும் பார்க்கலாம்...''

விடிந்ததுமே ஜெகன் ஹால் பக்கம் வர-அங்கே பாபு இல்லாமல் திகைத்து வாசலுக்கு வருகிறான்.

''குட்மார்னிங் அங்கிள்...நான் உங்க காரைத் துடைக்கவா...''

தோட்டத்துச் செடிகளுக்கு நீருற்றிக் கொண்டிருந்த பாபு உற்சாகத்துடன் கேட்கிறான்...

''காரை நீ துடைக்கிறியா...எதுக்குடா—ஆன்ட்டி கிட்ட சொன்னா அவனே துடைச்சிடுவா...''

பாபு கண் சிமிட்டிச் சிரிக்கிறான்.

''ஆனாலும் படு கஞ்சூஸ்ஸா இருப்பீங்க போல இருக்கே. உங்க கிட்டயிருந்து காசைப் பறிக்க-நான் பம்பாய்லேஇருந்து விபு அக்காவைத்தான் வரவழைக்கணும் போல இருக்கே...''

ஜெகன் சிரிக்க, ஜானகி பாபுவின் பின்னாலேயே வந்து மெல்லிதாகக் குரலில் எச்சரிக்கிறாள்.



''பாபு—அதிகமாகப் பேசாதே...''

''சரிம்மா—''

சுவிச்சைத் தட்டி விட்டாற் போல-மௌனமாகிவிடுகிறான் பாபு.

ஜெகன்னுக்கே பரிதாபமாய் இருக்கிறது

சரியாய் எட்டுமணிக்கெல்லாம், ஜானகி-தேவியையும் ஜெகனையும் அழைத்துச் செல்கிறாள்.

''தயவு செஞ்சு தப்பா நினைக்காதீங்க...நானும், பாபுவும் பரசுராம் வீட்டுக்கே போறோம். ஏதோ கொஞ்ச நாள் நான் இங்கே பாபுவோட இருந்துட்டு, அப்புறம் சோனாகிட்டயே போயிடலாம்னு இருக்கேன்...''

''ஜானகி என்னது இது...''

''ஆமா. எப்படியும் இங்கேயே நிரந்தரமாத் தங்கப் போறதில்லே...இப்படி தினமும் ஒரு பிரச்னையோட இருக்கறதை விட, என்னை உசிருக்கும் மேல விரும்பற சோனாவோட-கடைசி மூச்சு வரைக்கும் அவகூடவாவது இருக்கலாம்னு தோணுது. எப்படியும் பாபுவைப் பார்த்துக்க பரசுராம் இருக்கார்...எனக்கு, அவர் நம்பரைக் கொஞ்சம் டயல் செஞ்சுத் தாங்களேன்...அவரையே புறப்பட்டு வந்து எங்களை அழைச்சிட்டு போகச் சொல்றேன்...''

''க்கும்...''

அவர்கள் பின்னாலேயே கனைப்புச் சத்தம்...தேவி, திடுக்கிட்டு திரும்பிப் பார்க்கிறாள்...

பரசுராம், பாபுவை கையில் தூக்கிக் கொண்டு முகமெல்லாம் சிரிப்பாக...

''ஐயோ...இப்பத்தான் உங்களைப் பத்திப் பேசிட்டே இருந்தேன்...அதுக்குள்ள வந்து நிற்கிறீங்க. உங்களுக்கு ஆயுசு நூறு...''

உண்மையிலேயே-ஜானகியின் முகத்தில் அது நேரம் வரையில் தொலைந்து போயிருந்த சிரிப்பு வந்து ஒட்டிக் கொள்கிறது.

"நான் இந்தப் பக்கமா-என் ஆடிட்டரைப் பார்க்கப் போக வேண்டியிருந்தது...சரி...பார்த்துட்டு திரும்பி வர்றப்ப உங்களையும் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்..."

'நாங்க ரெண்டு பேரும் இப்பவே உங்ககூட கிளம்ப றோம்..."

ஜெகன், எங்கே ஏதாவது சொல்லி மறுத்துவிடப் போகிறானோ என்கிற பதட்டத்தில் வேகமாய் சொல்கி றாள் ஜானகி.

பரசுராம் ஏன், எதற்கு என்றெல்லாம் கேட்கவே இல்லை...அதே நிறைந்த சிரிப்புடன் தலையசைக்கிறார்.

"உங்க ரெண்டு பேருக்கும் எப்பவும் என்னோட ஹாஸ்டல்லே இடம் உண்டும்மா..."

ஜானகி, தேவியின் கன்னத்தில் முத்தமிடுகிறாள். தேவி அப்படியே அவளை அணைத்தபடி நிலை குலைந்து போய் விட்டாள்.

பாபு, உற்சாகத்துடன் ஜெகனின் கழுத்தைக் கட்டிக் கொள்கிறான்.

"நான் வர்றேன் அங்கிள். தீபாவளி, பொங்கல்ன வாழ்த்து அனுப்புவேன். மறக்காம பதில் போடுங்க...அப் புறம், எங்க அம்மாகிட்ட நீங்களாவது சொல்லுங்க அங்கிள்-பாம்பே போனாலும் சரி...மெட்ராஸ்லே இருந்தா லும் சரி...'என் புருஷனைத் தேடித் தாங்க...தேடித் தாங்க'ன்னு சோனாவையும், பரசுராம் அங்கிளையும் தொந்தரவு செய்யக் கூடாதுன்னு..."

ஜானகி, கண்களை ஒற்றிக் கொள்கிறாள்.

"இனிமே நான் யாரையும் அது மாதிரி கேட்டு தொல்லை கொடுக்க மாட்டேன்டா...."

"இப்ப அப்படித்தான் சொல்லுவே—அங்கே போய் ஆரம்பிச்சிடுவே...'"

"சத்தியமா மாட்டேம்பா..."



ஜானகி, ஜெகனைப் பார்த்து "உங்கள மறுபடியும் பார்த்ததே எனக்குப் போதுங்க உங்களப் பொறுத்தவர பழையபடி என்னை செத்துப் போனவனா நினைச்சு மறந்துட்டு, தேவியோட சந்தோஷமா வாழறுங்க. நம்ம தலைவிதிப்படி நடந்துவிட்ட நிகழ்ச்சிகளுக்கு தேவி என்ன செய்வாள்? ஏதாவது முக்கியமா இருந்த நானே லெட்டர் எழுதுறேன். தயவுசெய்து நீங்க மட்டும் என்னை தொடர்பு கொள்ள முயற்சி செய்யாதீங்க" என்று கண்ணீர் வடிய கலங்கிச் சொன்னாள்.

"நிருபமா எங்கே நிரு"

ஜானகி அவளிடம் சொல்லிக் கொள்வதற்காக அவளது அறைப்பக்கம் திரும்ப,

அவளே அறை வாசலில்...

ஒரு கணம் குழந்தையையே உற்றுப் பார்த்த ஜானகிக்கு நெஞ்சே வெடித்து விடும் போல இருக்கிறது.

'நிரு ஆன்ட்டி ஊருக்குப் போயிட்டு வரட்டுமா?"

"உம்."

சிறுமி அரைகுறையாய் தலையாட்டுகிறாள்.

ஜானகி, நிதானமாய் அவளருகில் வந்து, மண்டி யிட்டு அமர்ந்து கெஞ்சும் குரலில் கேட்கிறாள்...

"நிரு...நான் நான் ஊருக்குப்போறேனே. ஒரேயொரு முத்தம் தரலாமா?"

நிரு, தயங்கியபடி அவளது கையருகே வந்து நிற்க, 'எங்கே வலிக்குமோ' என்கிற பயத்துடன் ஒரு பூச் செண்டை முத்தமிடுவதுபோல மென்மையாய் முத்தமிடு கிறாள், ஜானகி.

"டாட்டா"

பாபு பரசுராமின் கையைப் பிடித்தபடி நிருவைப் பார்த்து வேகமாய் கையசைக்கிறான்.

முற்றும்